දේශීය ආදායම්-ශ්‍රී ලංකා
உள்நாட்டு இறைவரி-இலங்கை
Inland Revenue -Sri Lanka



# 2017

# කාර්ය සාධන වාර්තාව
# செயலாற்றுகை அறிக்கை
# PERFORMANCE REPORT

# உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் செயலாற்று அறிக்கை

# 2017

IRDSL

**ஐவன் திசாநாயக்க**

**உள்நாட்டு இறைவரித் திணைக்களம்**

IRDSL

## 2017 ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகையின் பொழிப்பு

உள்நாட்டு இறைவரித் திணைக்களமானது 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியிலும் அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்காக இறைவரி வருமானத்தினைத் திரட்டும் நோக்கத்தினை நிறைவேற்றுவதில் அதன் பங்களிப்பினை வழங்கியுள்ளது. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சேகரிக்கப்பட்ட மொத்த இறைவரி வருமானமானது ரூபா. 836,518 மில்லியனாக இருந்ததுடன், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது ரூபா.194,971 மில்லியன் அதிகரிப்பினைக் காட்டுகின்றது. இது மொத்த அரசாங்க இறைவரி வருமானத்திற்கு 45.67% பங்களிப்பினை வழங்கியுள்ளதுடன், குறித்த ஆண்டுக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5.25% பங்களிப்பினையும் வழங்கியுள்ளது.

வரி இணக்கப்பாடுகளை அதிகரிப்பதற்கான வசதிப்படுத்தல் மற்றும் அமுலாக்கல் நடவடிக்கைகளினைக் கொண்டுள்ள ஒருங்கிணைந்த முறைமையானது, உள்நாட்டு இறைவரி திணைக்களம் அதன் நோக்கங்களினை நிறைவேற்றிக் கொள்வதற்கு வழி வகுத்துள்ளது. அத்துடன், வரியினை மீள அறவீடு செய்வதற்காக தவறவிடப்பட்ட வரி அறவீட்டுக்கேற்ற வகையில் உரிய சட்டவாக்கங்களில் விதித்துரைக்கப்பட்டவாறான வரி இணக்கப்பாடுகளினை கண்காணித்தல் மற்றும் அமுலாக்குதல் தொடர்பான நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டன.

வரி உரைபெயர்ப்புக் குழுவானது குறித்த ஆண்டு காலப்பகுதியில் 33 வழக்குகள் தொடர்பில் உரைபெயர்ப்புக்களை வழங்கியுள்ளதுடன், சட்டவாக்கத்தின் குறித்த சில ஏற்பாடுகள் தொடர்பில் தேவையான வழிகாட்டுதல்கள் மற்றும் அறிவுறுத்தல்களையும் வழங்கியுள்ளது.

வரி பதிவு செய்தல் அலகானது வேறுபட்ட வரி வகைகளினைப் பதிவு செய்வதில் சௌகரியமான சேவையினை அளிக்கும் பொருட்டு 2017 இல் தாபிக்கப்பட்டது. தகவல் கிளை, ஏனைய மதிப்பீட்டு அலகுகள் மற்றும் பிராந்திய அலுவலகங்களினால் எடுக்கப்பட்ட முயற்சிகளினைத் தொடர்ந்து கணிசமானளவு புதிய வரிக் கோவைகள் திறக்கப்பட்டிருந்தன.

குறித்த ஆண்டு காலப்பகுதியில், வியாபார ஆலோசனை அலகானது உதவி அல்லது தகவலினை ஒவ்வொரு ஆளுக்கும் கோருகின்ற அவற்றினை வழங்கும் வகையில் அலுவலர்கள் வலுப்படுத்தப்பட்டுள்ளார்கள்.

குறித்த ஆண்டு காலப்பகுதியில், நிதி மூலக்கூறுகள் தொடர்பில் தனிநபர் வருமான வரி (IIT), பங்குடமை வருமான வரி (PIT) பெறுமதி சேர் வரி என்பன இறைவரி நிருவாக முகாமைத்துவ தகவல் முறைமையின் கீழ் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதன் விளைவாக, தனிநபர் வருமான வரி (IIT) மற்றும் பங்குடமை வருமான வரி (PIT) மற்றும் அட்டவணைகள் என்பனவற்றின் இணைய மூலமான சமர்ப்பித்தலானது 2017 நவம்பரிலிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

IRDSL

## *தூர* நோக்கு

வரி செலுத்தும் பொது மக்களுக்கு மிகச் சிறப்பாக பயிற்றுவிக்கப்பட்ட அர்ப்பணிப்புள்ள மற்றும் முழுமையாக தன்னியக்க முறைமையினால் வசதியளிக்கப்பட்ட பதவியினரைக் கொண்டு வரி செலுத்துனர் நட்பு வரி நிருவாக சேவை வழங்குனராக இருத்தல்

## பணிக்கூற்று

வரி ஏய்ப்பு மற்றும் வரி தவிர்ப்புக்களினை தடுக்கும் அதேவேளை தன்னார்வ இணக்கப்பாட்டினை ஊக்குவிப்பதன் மூலம் வரி மற்றும் பிற தொடர்புடைய சட்டங்களின் நியதிகளுக்கு அமைவாக வரிகளைச் சேகரித்தல்; மற்றும்

வரிகளையும் தொடர்புற்ற சட்டங்களையும் நியாயமாகவும் நட்புறவுமிக்கதாகவும் மற்றும் திறமையான முறையிலும் நிர்வகிப்பதன் மூலம் உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் நிர்வகிக்கப்படும்முறைமையொன்றில் பொதுமக்களின் நம்பிக்கையை மேம்படுத்தலும் அதன் மூலமாக நன்மைபயக்கத்தக்க வரிக் கலாச்சாரம் ஒன்றினைஅதிகரிக்கச் செய்தல்.

## உபாய இலக்குகள்

வரிச் சட்டங்களுடனான வரி செலுத்துநரின் சுயவிருப்பு இணக்கப்பாட்டினை மேம்படுத்துவதற்காக அதனை ஊக்குவிப்பதில் உதவத்தக்க நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளுதலும் அவ்விதமான இணக்கப்பாட்டினைக் காட்டாதவர்களைக் கண்டறிதலும் பொருத்தமானதும் உகந்ததுமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதலும்.

செயற்றிறன்மிக்க வேலை நடைமுறைகள், தொழில்நுட்பம் என்பவற்றைப் பிரயோகித்து கிடைப்பனவிலுள்ள வளங்களைச் சிறப்பாகப் பயன்படுத்துவதன் மூலம் திணைக்களத்தின் செயற்றிறனை மேம்படுத்தல்.

திணைக்களத்தினால் அதனது குறிக்கோளை நிறைவு செய்யும் முகமாக அதன் பதவியணியினர் மேலும் சிறந்த முறையில் பங்களிப்புச் செய்வதற்கு வசதியாக முகாமைத்துவம், தொழில்நுட்ப பயிற்சி மற்றும் வேலை அனுபவம் என்பவற்றின் மூலம் அவர்களது உற்பத்தித் திறனையும் தொழிற்துறைத் திறமையையும் உயர்த்துதல்.

IRDSL

## முதன்மை அலுவலர்கள்

---

| | |
|---|---|
| **திரு.டீ.எம்.எல்.ஐ. திசாநாயக்க** | **உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்** |

### பிரதி ஆணையாளர் நாயகங்கள்

---

| | |
|---|---|
| **திரு.ஏ.என்.குருகே** | வரி நிருவாகம்(கூட்டிணைவு, பாரிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள்) |
| **திருமதி.பீ.ரோஹினி** | வாடிக்கையாளர் சேவை, இணக்க ஆதரவு மற்றும் ஊக்குவிப்பு |
| **திருமதி.ஆர்.எம்.பி.எஸ்.கே.ராஜபக்ஸ** | மேன்முறையீடுகள், கடன் ஆட்சேபனை, முகாமைத்துவம் மற்றும் சட்டம் |
| **திரு.ஏ.ஏ.டி.யூ.அபேசிங்க** | வரி நிருவாகம் (கூட்டிணைவு சிறிய தொழில் முயற்சிகள் மற்றும் கூட்டிணைவில்லா துறை) |
| **திரு.எம்.ஜீ.சோமச்சந்திர** | வரி கண்காணிப்பு மற்றும் தகவல் தளம், மூல வரி நிருவாகம் மற்றும் இபெசேவ கடமைகள் |
| **திருமதி.சீ.எச்.வீரசிங்க** | மனித மூலதனம் மற்றும் சொத்து நிருவாகம் |
| **திருமதி.எச்.எம்.டி.முனசிங்க** | வரி இணக்கப்பாடு மற்றும் அமுலாக்கம், கூட்டிணைவு பாரிய மற்றும் நடுத்தர தொழில் மயற்சிகள் |
| **திருமதி.கே.எஸ்.பீ.ஆர்.டி.எஸ்.கருணாரத்ன** | வரிக் கொள்கை, சட்டவாக்கம், ஆட்சி முறை மற்றும் சர்வதேச விவகாரம் |
| **திரு.எம்.எஸ்.எம்.புவார்ட்** | தகவல் தொலைத்தொடர்பு தொழில்நுட்ப நிருவாகம் மற்றும் வரித் தொழிற்பாட்டு ஆதரவு |

IRD SL

## சிரேஷ்ட ஆணையாளர்கள்

| | |
|---|---|
| திரு.பி.எல்.எஸ்.லியனகே | வாடிக்கையாளர் பதிவு செய்தலும் இற்றைப்படுத்தலும் |
| திரு.ஏ.ஏ.தயாரத்ன | வரி இணக்கப்பாடு மற்றும் அமுலாக்கல் (பாரிய கூட்டிணைவு தொழில்முயற்சிகள்) |
| திரு.ஈ.எஸ்.டீ.சொய்சா | வலயம் I வரித் தொழிற்பாட்டு ஆதரவு மற்றும் பெறுகைகள் மற்றும் வழங்கல் |
| திரு.எச்.எம்.டப்.சி.பண்டார | வலயம் III மாற்றல் விலையிடல் ஒழுங்குவிதிகள் மற்றும் ஆராய்ச்சி |
| திரு.டீ.ஆர்.எஸ்.ஹப்புஆராச்சி | மனித மூலவள விருத்தி, மாற்றல் முகாமைத்துவம் மற்றும் வரி ஒப்பந்தங்கள் |
| திரு.டப்.எம்.பீ.என்.பீ.வணிகசேகர | இணக்க ஆதரவுச் சேவை மற்றும் ஊக்குவிப்பு பெசேவ, உபொசெவ, முத்திரைத் தீர்வை மற்றும் பந்தய மற்றும் சூதாட்ட வரி |
| திரு.எம்.ஜே.குணசிறி | புலனாய்வு |
| திரு.டீ.ரணகல | பாரிய நடுத்தர கூட்டிணைவு வியாபார தொழில்முயற்சிகள் மீள்நிதிகள் |
| திரு.ஆர்.எம்.ஜயசிங்க | சுயாதீன உள்ளக தொழிற்பாடுகள், கட்டுப்பாடுகள் |
| திரு.எம்.எச்.டென்சில் | வலயம் II மற்றும் VIP மற்றும் RTP அலகு |
| திரு.யூ.பி.வக்கும்பர | நிறுத்தி வைத்தல் வரி, உழைக்கும் போதே செலுத்தும் வரி, முத்திரைத் தீர்வை, பந்தய மற்றும் சூதாட்ட விதிப்பனவு மற்றும் இபெசேவ தீர்வைகள் |
| திரு.ஜே.ஏ.ஜீ.மஹிந்தரத்ன | பாரிய மற்றும் நடுத்தர கூட்டிணைவு வியாபார முயற்சியாளர்கள் மீள்நிதியிடல் |
| திரு.பீ.ஜே.ஜயரத்ன | சட்ட விவகாரங்கள் மற்றும் தவறவிடப்பட்ட வரி சேகரிப்பு |
| திரு.எம்.எல்.எம். தாஹிர் | மனித மூலவள விருத்தி |
| திரு.கே.டீ.எம்.ரத்னகுமார | பெறுகைகள் மற்றும் சொத்து முகாமைத்துவம் மற்றும் வரித் தொழிற்பாட்டு ஆதரவு |
| திரு.ஜீ.சி.மஹநாம | கணக்காய்வு பாரிய வியாபார தொழில்முயற்சிகள் மற்றும் சாசன முறைமைகள் கடமைகள் |
| திரு.கே.டி.எம்.என்.குணதுங்க | வரி இணக்கப்பாடு மற்றும் அமுலாக்கல் பாரிய தொழில்முயற்சிகள் |
| திரு.எஸ்.எஸ்.டி.வீரசேகர | சட்டவாக்கம், சர்வதேச விவகாரங்கள் மற்றும் உள்நாட்டு விவகாரங்களுடன் தொடர்புடைய பிரச்சனைகள் |
| திரு.ரி.ராஜபக்ஸ | நடுத்தர வியாபார தொழில்முயற்சிகளின் கணக்காய்வு |
| திரு.எம்.எஸ்.எம்.சியான் | தகவல் தொழில்நுட்பம் நிருவாகம் மற்றும் கொடுப்பனவுகளினைக் கட்டுப்படுத்துதல் |
| திரு.யூ.பி.எஸ்.ஏ.ஜயலத் | மாற்றல் விலையிடல் மற்றும் ஆராய்ச்சி |
| திரு.எம்.டீ.ஜே.எம்.தேவப்பிரிய | தகவல் மற்றும் இடைமுக முகவராண்மைகள் |

## *குறித்த ஆண்டின் போது திணைக்களத்தினால் நிருவகிக்கப்பட்ட வரிகள்*

குறித்த ஆண்டின் போது திணைக்களத்தினால் நிருவகிக்கப்பட்ட வரிகளும் தொடர்புடைய சட்டவாக்கங்களும் பின்வருமாறு;

| வரி | தொடர்புடைய சட்டவாக்கம் |
|---|---|
| வருமான வரி | 2007 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, 2008 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, 2009 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, 2011 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, 2012 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, 2013 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, 2014 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க மற்றும் 2015 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க.சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 2006 ஆம் 10 மே இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம் மற்றும் 2017 ஆம் ஆண்டின்24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம். |
| பெறுமதிசேர் வரி (நிதி சேவைகள் மீதான பெசேவ, பெசேவ மீதான முற்பண வரி மற்றும் பெசேவ தேர்ந்தெடுப்பு உள்ளடங்கலாக) | 2003 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, 2004 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, 2005 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, 2006 ஆம் ஆண்டின் 8 மற்றும் 49 ஆம் இலக்க , 2007 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, 2008 ஆம் ஆண்டின் 15 இலக்க, 2009 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, 2011 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, 2012 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, 2013 ஆம் ஆண்டின 17 ஆம் இலக்க, 2014 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, 2015 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க மற்றும் 2016 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டம் |
| பொருளாதார சேவைக் கட்டணம் | 2007 ஆம் ஆண்டின் 15 இலக்க, 2008 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்கச் சட்டம், 2009 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, 2011 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க. 2012 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, 2013 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, 2014 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க. 2015 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க மற்றும் 2017 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 2006 ஆம் ஆண்டின் 13 இலக்க பொருளாதார சேவைக்கட்டணச் சட்டம். சட்டம். |
| தேசக் கட்டுமான வரி | 2009 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, 2011 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, 2012 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, 2013 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, 2014 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, 2015 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, 2016 இன் 21 ஆம் இலக்க மற்றும் 2017 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 2009 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்கத் தேசக் கட்டுமான வரிச் சட்டம் |
| பந்தய மற்றும் சூதாட்ட விதிப்பனவு | 1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க மற்றும் 2015 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பந்தய மற்றும் சூதாட்ட விதிப்பனவுச் சட்டம் |
| முத்திரைத் தீர்வை | 208 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கசட்டம் மற்றும் 2011 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க முத்திரைத் தீர்வைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் மற்றும் 1982 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க முத்திரைத் தீர்வைகள் சட்டம். |
| பங்கு கொடுக்கல்வாங்கல் வரி | 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க நிதிச் சட்டம் மற்றும் 2007 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க நிதிச்சட்டம் |
| நிர்மாண கைத்தொழில் உத்தரவாத அறவீட்டு நிதியம் | |
| சமூகப் பொறுப்பு அறவீடு | 2015 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க நிதிச் சட்டம் |
| காணி மீதான மாற்றல் வரி | 2014 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க காணி காணி (உரிமையின்மை மீதான) சட்டம் |

பின்வரும் வரிகள் ஆரம்பத்தில் விதிக்கப்பட்டு தற்பொழுது அவை நீக்கப்பட்டு இருப்பினும் திணைக்களம் அவற்றின் மதிப்பீடு மற்றும் சேகரிப்பு பணியில் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றது.

| வரி | தொடர்புடைய சட்டவாக்கம் |
|---|---|
| தேசிய பாதுகாப்பு அறவீடு | திருத்தப்பட்டவாறான 1991 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க தேசிய பாதுகாப்பு வரிச் சட்டம் |
| பொருட்கள் சேவைகள் வரி | திருத்தப்பட்டவாறான 1996 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க பொருட்கள், சேவைகள் வரிச் சட்டம் |
| தேசத்தைப் பாதுகாப்பதற்கான பங்களிப்பு | திருத்தப்பட்டவாறான 1996 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க தேச பங்களிப்பு சட்டத்தினைப் பாதுகாத்தல் |
| புரள்வு வரி (வடமாகாணம்) | திருத்தப்பட்டவாறான 1981 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க புரள்வு வரிச் சட்டம் |

IRDSL

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| **2017 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கான செயலாற்றுகையின் பொழிப்பு** | **iii** |
| **முதன்மை அலுவலர்கள்** | **vii** |
| **குறித்த ஆண்டின் போது திணைக்களத்தினால் நிருவகிக்கப்பட்ட வரிகள்** | **ix** |
| **உள்ளடக்கம்** | **xi** |
| **பகுதி I மனித வள முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தி** | **1** |
| **அத்தியாயம் 1 மனித வளங்கள்** | **3** |
| 1.1 அங்கீகரிக்கப்பட்ட பதவியணி, பதவிவகிப்பவர்களின் எண்ணிக்கை மற்றும் பதவி வெற்றிடங்கள் | 5 |
| 1.2 பதவி உயர்வுகள் | 6 |
| 1.3 இளைப்பாறல்கள் | 6 |
| 1.4 பயிற்சி | 8 |
| **பகுதி II வரி நிருவாகம்** | **13** |
| **அத்தியாயம் 2 வருமான சேகரிப்பு** | **15** |
| 2.1 வரி செலுத்துனர்கள் மற்றும் வரிக் கோவைகளின் எண்ணிக்கை | 17 |
| 2.2 மொத்த வருமான சேகரிப்பு | 18 |
| 2.3 மொத்த வருமான பாய்ச்சல் | 19 |
| .4 முன்னைய ஆண்டுடனான வருமான ஒப்பீடு | 20 |
| 34 | |
| 2.5 முத்திரைத்தீர்வை, தேசக்கட்டுமான வரி என்பவற்றின் வருமானத்தினை மாகாண சபைகளுக்கு மாற்றுதல் | 21 |
| 2.6 வருமான சேகரிப்பு – சுய மதிப்பீடும் ஏனையவையும் | 22 |
| 2.7 அரசாங்க வருமானத்திற்கான உள்நாட்டு இறைவரியின் பங்களிப்பு | 23 |
| 2.8 வரி விபரத்திரட்டு இணக்கப்பாடு | 24 |
| 2.9 வருமான வரி சேகரிப்பு | 25 |
| 2.9.1 வருமான வரி சேகரிப்பு – துறை ரீதியான வகுப்பாக்கம் | 25 |
| 2.9.2 மூலத்தின் அடிப்படையில் வருமான வரி சேகரிப்பு பகுப்பாய்வு | 26 |
| 2.10 பெறுமதி சேர் வரி சேகரிப்பு | 27 |
| 2.10.1 பெறுமதி சேர் வரியின் கைத்தொழில் ரீதியான பகுப்பாய்வு | 28 |
| 2.11 தேசக் கட்டுமான வரி சேகரிப்பு | 29 |
| 2.11.1 தேசக் கட்டுமான வரி தொடர்பான பிரதான கொள்கை மாற்றங்கள் | 29 |
| 2.12 பொருளாதார சேவைக் கட்டண சேகரிப்பு | 30 |
| 2.12.1 பொருளாதார சேவைக் கட்டணத்துடன் தொடர்புடைய பிரதான கொள்கை மாற்றங்கள் | 31 |
| 2.13 உழைக்கும் பொழுது செலுத்தும் வரி சேகரிப்பு | 31 |
| 2.14 நிறுத்தி வைத்தல் வரிகள் (வட்டி மற்றும் விதித்துரைக்கப்பட்ட கட்டணங்களின் மீது) | 31 |
| 2.15 பந்தய மற்றும் சூதாட்ட அறவீடு | 32 |
| 2.16 நிர்மாணக் கைத்தொழில் உத்தரவாத நிதி அறவீடு சேகரிப்பு | 32 |
| 2.17 முத்திரைத் தீர்வை சேகரிப்பு | 32 |
| 2.18 2013 இலிருந்து 2017 வரைக்கும் உள்நாட்டு இறைவரி சேகரிப்பு (வரி ரீதியாக) | 33 |
| **அத்தியாயம் 3 செலவினம் மற்றும் உற்பத்தி வினைத்திறன் விகிதாசாரம்** | **35** |
| 3.1 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் ஏற்பட்ட மொத்த செலவினத்தின் ஒப்பீடு | 37 |
| 3.2 உற்பத்தி வினைத்திறன் விகிதாசாரம் | 38 |
| 3.3 உள்ளக கணக்காய்வு | 39 |
| **அத்தியாயம் 4 தவறவிடப்பட்ட வரிகள்** | **41** |
| 4.1 தவறவிடப்பட்ட வரிகள் | 43 |
| 4.2 தவறவிடப்பட்ட வரிகளைக் குறைப்பதற்கான திட்டங்கள் | 44 |
| 4.3 வரி நிலுவைகளை 3% இல் பேணுதல் | 44 |
| **அத்தியாயம் 5 கணக்காய்வுகள், மேலதிக வரி சேகரிப்பு, மீள் கொடுப்பனவுகள், அறவீட்டு நடவடிக்கைகள் மற்றும் மேன்முறையீடுகள்** | **47** |
| 5.1 கணக்காய்வுகள் | 49 |
| 5.2 மேன்முறையீடுகள் | 50 |
| 5.3 அறவீட்டு நடவடிக்கைகள் | 50 |
| 5.4 மீள் கொடுப்பனவுகள் | 50 |
| **அத்தியாயம் 6 சர்வதேச உறவுகள்** | **53** |
| 6.1 இரட்டை வரி விதிப்பினைத் தவிர்க்கும் ஒப்பந்தங்கள் | 55 |
| 6.2 வெளிநாடுகளில் நடாத்தப்பட்ட சர்வதேச வரி விதிப்பு தொடர்பான விடயங்களில் பங்குபற்றுதல்கள் | 57 |
| **அத்தியாயம் 7 சட்டவாக்கம்** | **61** |
| 7.1 குறித்த ஆண்டு காலப்பகுதியில் சட்டமாக்கப்பட்ட சட்டவாக்கம் | 63 |
| 7.2 அங்கீகரிக்கப்பட்ட தரும தாபனங்கள் | 63 |
| 7.3 வர்த்தமானி அறிவித்தல்கள் | 63 |

7.4 பொருள்கோடல் குழு 64

**அத்தியாயம் 8 ஏனைய பணிகள் 65**

8.1 வரி செலுத்துனர் சேவைப் பிரிவு 67

8.2 திணைக்களத்தினால் வழங்கப்பட்ட பணிப்புரைகள் மற்றும் இசைவாணைச் சான்றிதழ்கள் 67

8.3 கைமாற்றல் விலையிடல் ஒழுங்கமைப்பு அலகு 68

8.4 பயிற்சியளித்தல் கிளை 68

**அத்தியாயம் 9 வருமான நிருவாக மற்றும் முகாமைத்துவ தகவல் முறைமை (RAMIS) 71**


IRDSL

# பகுதி I

# மனித வள முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தி

IRDSL

IRDSL

# அத்தியாயம் 1
# மனித வளங்கள்

IRDSL

IRDSL

## அத்தியாயம் 1 - மனித வளங்கள்

### 1.1 அங்கீகரிக்கப்பட்ட பதவியணி, பதவி வகிப்பவர்களின் எண்ணிக்கை மற்றும் பதவி வெற்றிடங்கள்

பின்வரும் அட்டவணை திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியையும் 2017 டிசெம்பர் 31 அன்றுள்ளவாறு பதவியில் இருப்பவர்களின் எண்ணிக்கை மற்றும் பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கையையும் காட்டுகின்றது.

**2017.12.31 இலுள்ளவாறான பதவியணி**

| பதவிநிலை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | பதவி எண். | வெற்றிடம் |
|---|---|---|---|
| **உள்நாட்டு இறைவரி சேவை** | **1234** | **1162** | **72** |
| ஆணையாளர் நாயகம் | 1 | 1 | - |
| பிரதி ஆணையாளர் நாயகம் | 9 | 7 | 2 |
| சிரேஷ்ட ஆணையாளர் | 22 | 14 | 8 |
| ஆணையாளர் | 90 | 81 | 9 |
| சிரேஷ்ட பிரதி ஆணையாளர் / பிரதி ஆணையாளர் / உதவி ஆணையாளர் | 1107 | 1057 | 50 |
| சிரேஷ்ட வரி மதிப்பீட்டாளர் / வரி மதிப்பீட்டாளர் | 5 | 2 | 3 |
| **ஏனைய சேவைகள்** | **1542** | **1362** | **182** |
| ***இணைந்த சேவைகள்*** | ***1391*** | ***1262*** | ***129*** |
| பிரதம நிதி அலுவலர் | 1 | 1 | - |
| பிரதம கணக்காளர் | 1 | 1 | - |
| உள்ளக கணக்காய்வாளர் | 1 | 1 | - |
| பணிப்பாளர் (நிர்வாகம்) | 1 | 1 | - |
| கணக்காளர் | 5 | 4 | 1 |
| நிர்வாக அலுவலர் | 3 | 3 | - |
| மொழிபெயர்ப்பாளர் | 9 | 9 | - |
| அபிவிருத்தி அலுவலர் | 7 | 7 | - |
| நூலகர் | 1 | 1 | - |
| உதவி நூலகர் | 1 | - | 1 |
| பொதுமுகாமைத்துவ உதவியாளர் | 925 | 820 | 105 |
| போக்குவரத்து அலுவலர் | 1 | - | 1 |
| சாரதி | 86 | 81 | 5 |
| அலுவலக உதவியாளர் | 349 | 333 | 16 |
| ***ICT சேவைகள்*** | ***132*** | ***84*** | ***48*** |
| பணிப்பாளர் (ICT) | 2 | 1 | 1 |
| பிரதி பணிப்பாளர் / உதவி பணிப்பாளர் (ICT) | 6 | 6 | - |
| முறைமைப் பகுப்பாய்வாளர் | 1 | 1 | - |
| அலுவலர் (ICT) | 18 | 12 | 6 |
| உதவியாளர் (ICT) | 105 | 64 | 41 |
| ***ஏனையவை*** | ***19*** | ***16*** | ***5*** |
| பொறியியலாளர் | 1 | 1 | - |
| தொழில்நுட்ப அலுவலர் | 2 | - | 2 |
| கட்டிட மேற்பார்வையாளர் | 1 | - | 1 |
| ஆராய்ச்சி உதவியாளர் | 10 | 10 | - |

| | | | |
|---|---|---|---|
| வரவேற்பாளர் | 4 | 3 | 1 |
| தச்சுத் தொழிலாளி | 1 | - | 1 |
| சுத்திகரிப்பாளர் | - | 2 | - |
| | **2773** | **2553** | **225** |

### 1.2 பதவி உயர்வுகள்

- பத்து அணையாளர்கள் சிரேஷ்ட ஆணையாளர்களாக பதவி உயர்த்தப்பட்டுள்ளார்கள்.
- பன்னிரண்டு சிரேஷ்ட பிரதி ஆணையாளர்கள் ஆணையாளர்களாக பதவி உயர்த்தப்பட்டுள்ளார்கள்.
- பன்னிரண்டு பிரதி ஆணையாளர்கள் சிரேஷ்ட பிரதி ஆணையாளர்களாக பதவி உயர்த்தப்பட்டுள்ளார்கள்.
- இருநூற்றி தொண்ணூற்றியிரண்டு உதவி ஆணையாளர்கள் பிரதி ஆணையாளர்களாக பதவி உயர்த்தப்பட்டுள்ளார்கள்.

### 1.3 இளைப்பாறல்கள்

குறித்த ஆண்டு காலப்பகுதியில் சேவையிலிருந்து பின்வரும் சிரேஷ்ட அலுவலர்கள் ஓய்வு பெற்றுள்ளார்கள்.

- திருமதி.கே..தஹநாயக்க ஆணையாளர் நாயகம்
- திரு.ஜே.பி.டி.ஆர். ஜயசேகர பிரதி ஆணையாளர் நாயகம்
- செல்வி.டீ.ஜீ.பி.டப். குணதிலக பிரதி ஆணையாளர் நாயகம்
- திருமதி.பீ.ஏ.ஏ.டி.ஹேரத் பிரதி ஆணையாளர் நாயகம்
- திரு.ஜே.ரத்நாயக்க சிரேஷ்ட ஆணையாளர்
- திரு.ஓ.பி.கே.கே.சிறிசேன சிரேஷ்ட ஆணையாளர்
- திரு.கேஏ.டி.பி.கோரளாச்சாரி சிரேஷ்ட ஆணையாளர்
- திரு.டீ.பி.திசாநாயக சிரேஷ்ட ஆணையாளர்
- திரு.டப்.எஸ்.கே.டீ கொஸ்தா சிரேஷ்ட ஆணையாளர்
- திருமதி.டீ.எம்.பி.கணேபொல சிரேஷ்ட ஆணையாளர்

**ஏனைய இளைப்பாறல்கள்**

- ஆணையாளர் 2
- சிரேஷ்ட பிரதி ஆணையாளர் 4
- உதவி ஆணையாளர் / பிரதி ஆணையாளர் 19
- நிருவாக உத்தியோகத்தர் 1
- முகாமைத்துவ உதவியாளர் 20
- அலுவலக உதவியாளர் 18
- சாரதி 9

**<u>திருமதி.கே.தஹநாயக்க</u>**

திருமதி.கே.தஹநாயக்க அவர்கள் வரி மதிப்பீட்டாளராக 1981 ஆம் ஆண்டு இத்திணைக்களத்தில் இணைந்து கொண்டார். 2017, ஜூன் 22 ஆம் திகதியன்று இவர் இளைப்பாறிச் செல்லும் போது உள்நாட்டு இறைவரி ஆணயாளர் நாயகமாக கடமையாற்றிக் கொண்டிருந்தார். திருமதி.கே.தஹநாயக்க உள்நாட்டு இறைவரி சேவையில் பல்வேறு பதவிகளை வகித்திருப்பதுடன் 36 வருடங்கள் அயராது அர்ப்பணிப்புடன் சேவையாற்றியுள்ளார். அவருடைய பதவிக் காலத்தில், 2005 இல் ஐக்கிய அமெரிக்காவில் நடாத்தப்பட்ட இ-வர்த்தகம் மற்றும் இ-வியாபார விருத்தி தொடர்பான நிகழ்ச்சித்திட்டம், 2011 இல் சிங்கப்பூரில் நடாத்தப்பட்ட வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு மற்றும் பொருள்கோடல் குழு தொடர்பான நிகழ்ச்சித்திட்டம், 2012 இல் மலேசியாவில் நடாத்தப்பட்ட வரி விதிப்பனவில் சட்டவிதிகளினை தவிர்ப்பது தொடர்பான ஆசிய வரி அதிகாரிகள் கூட்டமைப்பு, 2015 இல் நெதர்லாந்தில் நடாத்தப்பட்ட உயர்மட்ட அதிகாரிகளுக்கான வரி நிருவாகம் தொடர்பான

செயலமர்வு மற்றும் 2016 இல் மெக்ஸிக்காவில் நடாத்தப்பட்ட மாற்றல் விலையிடல் ஆவணப்படுத்தல் மற்றும் நாட்டுக்கு நாடு அறிக்கையிடல் - OECD தொடர்பான செயலமர்வு உள்ளடங்கலான பல்வேறு வெளிநாட்டு வரி விதிப்பனவு சார்ந்த நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றியிருந்தார். அத்துடன் இவர் 2013 இல் டென்மார்க்கில் இடம்பெற்ற IFA காங்கிரசின் 67 ஆவது வருடாந்தக் கூட்டத்திலும், ஐக்கிய இராச்சியத்தில் நடாத்தப்பட்ட 2015 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்கான CATA வருடாந்த பொதுக் குழுக் கூட்டங்களிலும், 2016 இல் கொரியாவில் நடாத்தப்பட்ட IFA இன் ஆசிய பசுபிக் பிராந்திய மாநாட்டிலும் திணைக்களதினைப் பிரதிநிதித்துவப்படுத்தி கலந்து கொண்டுள்ளதுடன் இலங்கைக்கும் சுவிற்சலாந்துக்கும் மற்றும் இலங்கைக்கும் செக் குடியரசுக்குமிடையலான இரட்டை வரிவிதிப்பனவினைத் தவிர்க்கும் உடன்படிக்கைகளுக்கான பேச்சுவார்த்தைகளில் இலங்கையினைப் பிரதிநிதித்துவப்படுத்தியும் கலந்து கொண்டுள்ளார்.

## திரு.ஜே.பி.டீ.ஆர்.ஜயசேகர

வரி மதிப்பீட்டாளராக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் 1984 இல் இணைந்து கொண்ட திரு.ஜே.பி.டீ.ஆர்.ஜயசேகர, 2016 இல் பிரதி ஆணயாளர் நாயகம் பதவியினை அடையப் பெற்றிருந்தார். இவர் 2017, ஒக்டோபர் 15 ஆம் திகதியன்று இச்சேவையிலிருந்து இழைப்பாறியுள்ளார். திரு.ஜயசேகர அவரின் பதவிக் காலத்தின் போது, 2001 இல் அவுஸ்திரேலியாவில் இடம்பெற்ற வரி மாதிரி தொடர்பான செயலமர்வு, 2003 இல் ஐக்கிய இராச்சியத்தில் நடாத்தப்பட்ட உயர் முகாமைத்துவ நிலைபேறுகள் தொடர்பான பயிற்சியளித்தல் நிகழ்ச்சித்திட்டம், 2007 இல் இந்தியாவில் இடம்பெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவம் மீதான விசேட பயிற்சியளித்தல் நிகழ்ச்சித்திட்டம், 2012 இல் அங்கோலாவில் நடாத்தப்பட்ட சுங்க விரிவாக்க நவீனமயமாக்கலுடன் தொடர்புடைய முனைப்புடன் கூடிய பதவி தொடர்பான நிகழ்ச்சித்திட்டம் மற்றும் வரி விதிப்பனவு மற்றும் எண்ணெய்த்துறை தொடர்பான செயலமர்வு மற்றும் 2016 இல் மெக்ஸிக்கோவில் இடம்பெற்ற மாற்றல் விலையிடல் மற்றும் ஏனைய வரி இடர்கள் தொடர்பான செயலமர்வு என்பன உள்ளடங்கலான பல்வேறு வெளிநாட்டு வரி விதிப்பனவு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றில் பங்குபற்றியிருந்தார். இவர் 2012 இல் பிரான்ஸில் நடாத்தப்பட்ட பெசேவ தொடர்பான சர்வதேச மாநாடு, 2013 இல் ஜப்பானில் இடம்பெற்ற நான்காவது உயர் மட்ட வரி மாநாடு மற்றும் 2014 இல் சீனாவில் இடம்பெற்ற சீனாவுக்கும் சீசெல்ஸுக்கும் மற்றும் இலங்கைக்கும் சவூதி அரேபியாவுக்குமிடையிலான உத்தேச இரட்டை வரி விதிப்பினைத் தவிர்க்கும் உடன்படிக்கை தொடர்பான பேச்சுவார்த்தைகள் என்பவற்றில் திணைக்களத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தி கலந்து கொண்டிருந்தார். இவர் திணைக்களத்தில் இறைவரி நிருவாக முகாமைத்துவ தகவல் முறைமையினை (RAMIS) அமுல்படுத்துவதில் அளப்பரிய சேவையினை ஆற்றியுள்ளார்.

## செல்வி.டி.ஜி.பீ.டப்.குணதிலக

செல்வி.டி.ஜி.பீ.டப்.குணதிலக வரி மதிப்பீட்டாளராக 1984 இல் இத்திணைக்களத்தில் இணைந்து கொண்டார். 2017, நவம்பர் 27 ஆம் திகதி இவர் ஓய்வு பெறும் போது பிரதி ஆணையாளர் நாயகமாக பதவி வகித்திருந்தார். செல்வி.குணதிலக உள்நாட்டு இறைவரி சேவையில் பல்வேறு பதவிகளினை வகித்துள்ளதுடன் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் 33 வருட காலம் அர்ப்பணிப்புடன் சேவையாற்றியுள்ளார். அவரின் பதவிக் காலத்தின் போது, அவர் 2006 இல் சிங்கப்பூரில் இடம்பெற்ற நிதிசார் வரிகள் தொடர்பான கருத்தரங்கு, 2007 இல் அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற இரட்டை வரி விதிப்பனவு நிவாரணம் தொடர்பான கருத்தரங்கு, 2011 இல் சிங்கப்பூரில் நடாத்தப்பட்ட வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு மற்றும் பொருள்கோடல் ஆணைக்குழுவின் வரி அதிகாரம் தொடர்பான நிகழ்ச்சித்திட்டம், 2013 இல் மலேசியாவில் இடம்பெற்ற IRBM - OECD வரிக் கொள்கைப் பகுப்பாய்வு நிகழ்ச்சித்திட்டம், 2014 இல் மலேசியாவில் நடாத்தப்பட்டஉயர் மாற்றல் விலையிடல் விடய ஆய்வுகள் தொடர்பான நிகழ்ச்சித்திட்டம், 2017 இல் சிங்கப்பூரில் இ- நிருவாக முறை மற்றும் தகவல் தொழில்நுட்ப முறைமை முகாமைத்துவம் தொடர்பில் நிறைவேற்றுனர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம், 2005 இல் இத்தாலியில் நடாத்தப்பட்ட பெசேவ தொடர்பான சர்வதேச வரி பேச்சுவார்த்தைகளிலும், 2011 இல் இந்தியாவில் இடம்பெற்ற வரி மற்றும் சமானமின்மை தொடர்பான 4 ஆவது ITD சர்வதேச மாநாட்டிலும், 2014 இல் பிரான்ஸில் இடம்பெற்ற 19 ஆவது OECD வருடாந்த வரி ஒப்பந்த

மாநாட்டிலும் மற்றும் இலங்கைக்கும் சிங்கப்பூருக்கும் மற்றும் இலங்கைக்கும் பின்லாந்துக்குமிடையிலான இரட்டை வரி விதிப்பனவினைத் தவிர்ப்பதற்கான உடன்படிக்கைகள் குறித்த பேச்சுவார்த்தைகள் உள்ளடங்கலான பல்வேறு வெளிநாட்டு கூட்டங்கள் மற்றும் கருத்தரங்குகளிலும் பங்குபற்றியிருந்தார். உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் நிருவகிக்கப்படும் நியதிச்சட்ட ஏற்பாடுகளின் பொருள்கோடல் குழுவிற்கு 2014 இலிருந்து 2017 வரையிலான காலப்பகுதிக்கு பொறுப்பாகவும் இருந்துள்ளார். இவர் உள்நாட்டு இறைவரி திணைக்கள அதிகாரிகளுக்கான உள்ளக பயிற்சியளித்தல் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு அளப்பரிய சேவையினை வழங்கியுள்ளார்.

## 1.4 பயிற்சி

### 1.4.1 உள்ளக பயிற்சியளித்தல்

திணைக்களத்தின் பயிற்சியளித்தல் கிளையானது, உதவி ஆணையாளர்களுக்கான பயிற்சியளித்தல் பாடநெறிகளையும் பரீட்சைகளையும் கிரமமாக நடாத்தி வருகின்றது. இவை அவர்களின் அறிவினை விருத்தி செய்வதனையும் பகுப்பாய்வு திறன்களை மேம்படுத்துவதனையும் குறிப்பாக வரி விதிப்பனவு மற்றும் கணக்கீட்டு அறிவினை விருத்தி செய்வதனையும் நோக்காகக் கொண்டு வழங்கப்பட்டு வருகின்றன. இத்தகைய பாடநெறிகளானவை, உத்தியோகத்தர்கள் அவர்கள் வகிக்கும் வகுப்புக்களில் அவர்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு தேவையான பல்வேறு சேவைத் தேவைப்பாடுகளை நிவர்த்தி செய்யும் வகையில் குறித்த விடயங்களில் பயிற்சியினை அளிக்கும் வகையிலும் அவர்களின் கடமைகளை நிறைவேற்றுவதற்கான அறிவினை பெற்றுக் கொள்ளும் நோக்குடனும் விசேடமாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

குறித்த ஆண்டு காலப்பகுதியில் பயிற்சியளிக்கப்பட்ட ஆட்கள் மற்றும் நடாத்தப்பட்ட பரீட்சைகளின் விபரம் பின்வருமாறு.

- **உதவி ஆணையாளர்களுக்கானவை**

| அட்டவணை 1.2 - பாடநெறி / பரீட்சை | பயிலுனர்களின் எண்ணிக்கை | |
|---|---|---|
| முதலாவது திணைக்களப் பரீட்சைக்கான தரம் III இலுள்ள உதவி ஆணையாளர்களுக்காக நடாத்தப்பட்ட பயிற்சியளித்தல் வகுப்புக்கள் (2 ஆவது தொகுதி) | சிங்கள மொழிமூலம் - 90<br>தமிழ் மொழிமூலம் - 07<br>ஆங்கில மொழிமூலம் - 04 | |
| இரண்டாவது திணைக்களப் பரீட்சைக்குத் தோற்றுகின்ற தரம் III இலுள்ள உதவி ஆணையாளர்களுக்குப் பயிற்சி வகுப்புக்கள் நடாத்தப்பட்டன. | சிங்கள மொழிமூலம் - 379<br>தமிழ் மொழிமூலம் - 14<br>ஆங்கில மொழிமூலம் - 21 | |
| தரம் III இலுள்ள உதவி ஆணையாளர்களுக்கான முதலாவது வினைத்திறன் தடைகாண் பரீட்சை | 2 ஆவது தடவை | சிங்கள மொழிமூலம் - 210<br>தமிழ் மொழிமூலம் - 08<br>ஆங்கில மொழிமூலம் - 25 |
| தரம் III இலுள்ள உதவி ஆணையாளர்களுக்கான இரண்டாவது வினைத்திறன் தடைகாண் பரீட்சை | 3 ஆவது தடவை | சிங்கள மொழிமூலம் - 18<br>தமிழ் மொழிமூலம் - 00<br>ஆங்கில மொழிமூலம் - 01 |
| தரம் III இலுள்ள உதவி ஆணையாளர்களுக்கான முதலாவது வினைத்திறன் தடைகாண் பரீட்சை (இரண்டாவது தொகுதி) | 2 ஆவது தடவை | சிங்கள மொழிமூலம் - 81<br>தமிழ் மொழிமூலம் - 04<br>ஆங்கில மொழிமூலம் - 06 |

- **கருத்தரங்குகள், செயலமர்வுகள் போன்றவை**

| **அட்டவணை 1.3 குறித்த ஆண்டு காலப்பகுதியில் ஏற்பாடு செய்யப்பட்ட கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள்** | | |
|---|---|---|
| **விடயம்** | **குறித்த ஆண்டில் நடாத்தப்பட்ட கருத்தரங்கு / செயலமர்வுகளின் எண்ணிக்கை** | **பங்குபற்றிய அலுவலர்களின் எண்ணிக்கை** |
| வரி நடைமுறைகள் தொடர்பான கருத்தரங்கு | 1 | 95 |
| வரி செலுத்துனர் பதிவு செய்தல் தொடர்பான கருத்தரங்கு | 2 | 86 |
| வரி விதிப்பனவு தொடர்பான சர்வதேச உறவுகள் பற்றிய கருத்தரங்கு | 1 | 94 |
| பங்குச் சந்தை குறித்த கருத்தரங்கு | 1 | 92 |
| சிறிய தொழில் முயற்சியாண்மைகளுக்கான இறிஅறி தொடர்பான கருத்தரங்கு | 3 | 246 |

## கணனிமயப்படுத்தப்பட்ட கணக்கீட்டுப் பொதி தொடர்பான பயிற்சி

அறிவினை விருத்தி செய்யும் நோக்குடன் 30 உள்நாட்டு இறைவரி திணைக்கள அலுவலர்களுக்கு கணனிமயப்படுத்தப்பட்ட கணக்கீட்டுப் பொதி தொடர்பான பயிற்சியளித்தல் நிகழ்ச்சித்திட்டமொன்று நடாத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டமானது AAT நிறுவகத்துடன் இணைந்து நடாத்தப்பட்டது.

## 1.4.2 வெளிநாட்டுப் பயிற்சி

சிறந்த வரி நிருவாகிகளாக அலுவலர்களின் உயர் தொழில் மட்டத்தினைப் பேணும் பொருட்டு வரிச் சட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட முன்னேற்றகரமான மாற்றங்கள் மற்றும் ஏனைய நாடுகளிலுள்ள மிகச் சிறந்த நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்தரங்குகள் அல்லது செயலமர்வுகளில் திணைக்களத்தின் பல்வேறு அதிகாரிகளும் பங்குபற்றுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. அத்தகைய வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகளுக்காக அனுப்பி வைக்கப்பட்ட அலுவலர்களின் விபரங்கள் பின்வருமாறு.

| **அட்டவணை 1.4 – வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றியவர்களின் விபரங்கள்** | | | | |
|---|---|---|---|---|
| **இல.** | **பெயரும் பதவியும்** | **நிகழ்ச்சித்திட்டம்** | **நாடு** | **காலப்பகுதி** |
| | | | | **இலிருந்து - விரை** |
| 1 | திரு.டீ.எம்.எல்.ஐ.திசாநாயக்க ஆணையாளர் நாயகம் | சட்டவாக்க செயலமர்வு கொள்கையிலிருந்து | ஐக்கிய இராச்சியம் | 15.09.2017-23.09.2017 |
| 2 | திரு.டீ.எம்.எல்.ஐ.திசாநாயக்க ஆணையாளர் நாயகம் | 2017 OECD கூட்டிணைவு ஆட்சிமுறை தொடர்பான ஆசிய வட்ட மேசை மாநாடு | ஜப்பான் | 18.10.2017-22.10.2017 |
| 3 | திரு.எம்.ஜீ.சோமச்சந்திர பிரதி ஆணையாளர் நாயகம் | 2017 OECD கூட்டிணைவு ஆட்சிமுறை தொடர்பான ஆசிய வட்ட மேசை மாநாடு | ஜப்பான் | 18.10.2017-22.10.2018 |
| 4 | செல்வி.ஆர்.பி.டீ.எஸ்.டி.பெரேரா பிரதம கணக்காளர் | PIM சர்வதேச முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் | தாய்லாந்து | 20.08.2017-22.10.2017 |
| 5 | செல்வி.என்.ஏ.எச்.கே.விஜேரத்ன பிரதம உள்ளக கணக்காய்வாளர் | PIM சர்வதேச முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் | தாய்லாந்து | 20.08.2017-22.10.2018 |
| 6 | திரு.பி.எல்.எஸ்.லியனகே சிரேஷ்ட ஆணையாளர் | BEPS மீதான சட்டமுறை உள்ளடங்கத்தின் 2 ஆவது கூட்டம் | பாரிஸ் | 24.01.2017-28.01.2017 |

| | | | | |
|---|---|---|---|---|
| 7 | திரு.ஈ.எஸ்.டீ.சில்வா<br>சிரேஷ்ட ஆணையாளர் | OECD – வடிவமைப்பு மூலமான இணக்கப்பாடு [MTC நிகழ்வு] | ஹங்கேரி | 15.10.2017-22.10.2017 |
| 8 | திரு.எச்,எம்.டப்.சி.பண்டார<br>சிரேஷ்ட ஆணையாளர் | தலைமை மாற்றம்: கலாச்சார மாற்றம்: மக்களின் பழக்கவழக்கம் மற்றும் நடத்தை தொடர்பான செயலமர்வு | ஐக்கிய இராச்சியம் | 11.11.2017-19.11.2017 |
| 9 | திரு.எம்.எச்.டென்சில்<br>சிரேஷ்ட ஆணையாளர் | OECD – வடிவமைப்பு மூலமான இணக்கப்பாடு [MTC நிகழ்வு] | ஹங்கோரி | 15.10.2017-22.10.2017 |
| 10 | திரு.யூ.பி.வக்கும்புர<br>சிரேஷ்ட ஆணையாளர் | OECD – வடிவமைப்பு மூலமான இணக்கப்பாடு [MTC நிகழ்வு] | ஹங்கேரி | 15.10.2017-22.10.2018 |
| 11 | திரு.ரி.ராஜபக்ஸ<br>ஆணையாளர் | OECD – வரிக் கொள்கை பகுப்பாய்வு மற்றும் வருமான புள்ளிவிபரவியல் [MTC நிகழ்வு] | கொரியா | 19.03.2017-25.03.2017 |
| 12 | திரு.எம்.என்.எம்.நிப்லி<br>ஆணையாளர் | BEPS இற்கான MNE இன் கணக்காய்வு தொடர்பான செயலமர்வு, விடய ஆய்வு | மெக்ஸிக்கோ | 25.11.2017-03.12.2017 |
| 13 | திரு.எஸ்.எம்.ஏ.பண்டார<br>ஆணையாளர் | பொது முகாமைத்துவ முதுமாணி நிகழ்ச்சித்திட்டம் (MPM) – 2016 இன் இரண்டாவது நாட்டு ஆய்வு விஜயம் | சீனா | 27.02.2017-11.03.2017 |
| 14 | திரு.எஸ்.எம்.ஏ.பண்டார<br>ஆணையாளர் | புலனாய்வு மற்றும் நுண்ணறிவினைப் பெறுவதற்கான நவீன உத்திகள் தொடர்பான செயலமர்வு | இந்தியா | 21.08.2017-25.08.2017 |
| 15 | செல்வி.எல்.எம்.சி.வீரக்கோன்<br>ஆணையாளர் | சர்வதேச நாணய நிதியத்தின் நாணய விவகார திணைக்களத்தினால் SARTTAC இல் முன்னெடுக்கப்பட்ட சர்வதேச VAT/GST செயலமர்வு | இந்தியா | 24.09.2017-30.09.2017 |
| 16 | திரு.எச்.ரி.கே.எப்.பீரிஸ்<br>ஆணையாளர் | OECD – வரிக் கொள்கை பகுப்பாய்வு மற்றும் வருமான புள்ளிவிபரவியல் [MTC நிகழ்வு] | கொரியா | 19.03.2017-25.03.2017 |
| 17 | செல்வி.யூ.எச்.எம். ஐராங்கனி<br>ஆணையாளர் | பொது முகாமைத்துவ முதுமாணி நிகழ்ச்சித்திட்டம் (MPM) – 2016 இன் இரண்டாவது நாட்டு ஆய்வு விஜயம் | சீனா | 18.05.2017-29.05.2017 |
| 18 | செல்வி.ஏ.டி.ஐ.எஸ்.அபேசேகர<br>ஆணையாளர் | வருமானவரி செயலமர்வு | சீனா | 05.03.2017-11.03.2017 |
| 19 | செல்வி.எச்.ஏ. லலிதா ரஞ்சனி<br>ஆணையாளர் | பொது முகாமைத்துவ முதுமாணி நிகழ்ச்சித்திட்டம் (MPM) – 2016 இன் இரண்டாவது நாட்டு ஆய்வு விஜயம் | சீனா | 27.02.2017-11.03.2017 |
| 20 | திரு.டப்.எஸ்.திலகரத்ன<br>ஆணையாளர் | OECD-BEPS இற்கான MNE இன் கணக்காய்வு [MTC நிகழ்வு] | ஹங்கேரி | 26.03.2017-02.04.2017 |
| 21 | செல்வி.எம்.ஜே.பெரேரா<br>ஆணையாளர் | சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் மீதான வரி இணக்கப்பாடு மற்றும் கவனம் என்பவற்றினை ஒழுங்கமைத்தல் | சீனா | 09.04.2017-16.04.2017 |
| 22 | திரு.கே.ஜீ.பீ.கே.தர்மவர்தன<br>ஆணையாளர் | OECD-BEPS இற்கான MNE இன் கணக்காய்வு [MTC நிகழ்வு] | ஹங்கேரி | 26.03.2017-02.04.2017 |
| 23 | திரு.எம்.கே.பீ.ஜே.எஸ்.எஸ்.பெரேரா<br>ஆணையாளர் | OECD-BEPS இற்கான MNE இன் கணக்காய்வு [MTC நிகழ்வு] | ஹங்கேரி | 26.03.2017-02.04.2018 |
| 24 | திரு.ஐ.வி.ஜயரத்ன<br>ஆணையாளர் | BEPS இற்கான MNE இன் கணக்காய்வு தொடர்பான செயலமர்வு, விடய ஆய்வு | மெக்ஸிக்கோ | 25.11.2017-03.12.2017 |

| | | | | |
|---|---|---|---|---|
| 25 | செல்வி.யூ.ஜீ.ஆர்.தமயந்தி கணக்காளர் | உபாய முகாமைத்துவம் மீதான சர்வதேச நிகழ்ச்சித்திட்டம் | இந்தோனேசியா | 14.05.2017-21.05.2017 |
| 26 | செல்வி.யூ.எல்.சி.பெரேரா கணக்காளர் | உபாய முகாமைத்துவம் மீதான சர்வதேச நிகழ்ச்சித்திட்டம் | இந்தோனேசியா | 14.05.2017-21.05.2017 |
| 27 | செல்வி.யூ.பி.விஜயஹேவ கணக்காளர் | அரசாங்க பெறுகைகள் மற்றும் ஒப்பந்த நிருவாகத்தில் டிப்புளோமா (DIPPCA) – 2ஆவது நாட்டு ஆய்வுச் சுற்றுலா | ஐக்கிய இராச்சியம் | 14.11.2017-26.11.2017 |
| 28 | செல்வி.டி.எம்.என்.டி.தசநாயக்க ஆணையாளர் (பதில்) | சர்வதேச நாணய நிதியத்தின் நாணய விவகார திணைக்களத்தினால் SARTTAC இல் முன்னெடுக்கப்பட்ட சர்வதேச VAT/GST செயலமர்வு | சீனா | 24.09.2017-30.09.2017 |
| 29 | செல்வி.டப்.டி.ஏ.ஏ.வலிமினி சிரேஷ்ட பிரதி ஆணையாளர் | BEPS இற்கான MNE இன் கணக்காய்வு தொடர்பான செயலமர்வு, விடய ஆய்வு | மெக்ஸிக்கோ | 25.11.2017-03.12.2017 |
| 30 | செல்வி.எஸ்.ஐ.வீரவர்தன பிரதி ஆணையளர் | வருமானவரி செயலமர்வு | சீனா | 05.03.2017-11.03.2017 |
| 31 | திரு.ஏ.கே.விக்கிரமசூரிய பிரதி ஆணையாளர் | வருமானவரி செயலமர்வு | சீனா | 05.03.2017-11.03.2017 |
| 32 | செல்வி.ஆர்.பி.எஸ்.லியனகே பிரதி ஆணையளர் | சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் மீதான வரி இணக்கப்பாடு மற்றும் கவனம் என்பவற்றினை ஒழுங்கமைத்தல் | சீனா | 09.04.2017-16.04.2017 |
| 33 | செல்வி.எஸ்.டி.நிர்மலாதேவி பிரதி ஆணையளர் | LHDNM-OECD: சிறந்த வரி நிரவாகத்திற்கான தொழில்நுட்ப மற்றும் பகுப்பாய்வு | மலேசியா | 09.04.2017-15.04.2017 |
| 34 | திரு.எஸ்.டப்.பி.வை.சில்வா பிரதி ஆணையளர் | பொது முகாமைத்துவ முதுமாணி நிகழ்ச்சித்திட்டம் (MPM) – 2016 இன் இரண்டாவது நாட்டு ஆய்வு விஜயம் | சீனா | 27.02.2017-11.03.2017 |
| 35 | திரு.என்.எஸ.பி.சேனநாயக்க பிரதி ஆணையளர் | BEPS இற்கான MNE இன் கணக்காய்வு தொடர்பான செயலமர்வு, விடய ஆய்வு | மெக்ஸிக்கோ | 25.11.2017-03.12.2017 |
| 36 | திரு.பி.என்.எஸ்.பெரேரா பிரதி ஆணையளர் | வரி நிருவாகிகள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் பொதநலவாய கூட்டமைப்பு | ஐக்கிய இராச்சியம் | 28.07.2017-09.09.2017 |
| 37 | செல்வி.எச்.டி.ஆர்.பி.சிறிவர்தன பிரதி ஆணையளர் | பொது முகாமைத்துவ முதுமாணி நிகழ்ச்சித்திட்டம் (MPM) – 2016 இன் இரண்டாவது நாட்டு ஆய்வு விஜயம் | சீனா | 27.02.2017-11.03.2017 |
| 38 | திரு.பி.ஜி.எஸ்.துசார பிரதி ஆணையளர் | இடர் முகாமைத்துவம் தொடர்பான வரி செயலமர்வு | பிஜி | 23.04.2017-29.04.2017 |
| 39 | திரு.வை.எஸ்.திசாநாயக்க பிரதி ஆணையளர் | சர்வதேச நாணய நிதியத்தின் நாணய விவகார திணைக்களத்தினால் SARTTAC இல் முன்னெடுக்கப்பட்ட சர்வதேச VAT/GST செயலமர்வு | இந்தியா | 24.09.2017-30.09.2017 |
| 40 | திருமதி.டப்.ஐ.பாலராஜ் பிரதி ஆணையளர் | சர்வதேச நாணய நிதியத்தின் நாணய விவகார திணைக்களத்தினால் SARTTAC இல் முன்னெடுக்கப்பட்ட சர்வதேச VAT/GST செயலமர்வு | இந்தியா | 24.09.2017-30.09.2017 |
| 41 | திரு.எச்.ஏ.எல்.பி.ஹேரத் பிரதி ஆணையளர் | இடர் முகாமைத்துவம் தொடர்பான வரி செயலமர்வு | பிஜி | 23.04.2017-29.04.2017 |

| | | | | |
|---|---|---|---|---|
| 42 | திரு.எம்.ஜீ.ஆர்.டப்.பீ.கடுவெல பிரதி ஆணையாளர் | புலனாய்வு மற்றும் நுண்ணறிவினைப் பெறுவதற்கான நவீன உத்திகள் தொடர்பான செயலமர்வு | இந்தியா | 21.08.2017-25.08.2017 |
| 43 | செல்வி.எஸ்.கே.என்.சுஜானி பிரதி ஆணையாளர் | வரி நிருவாகிகளின் பொதுநலவாய கூட்டமைப்பின் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | ஐக்கிய இராச்சியம் | 28.07.2017-10.09.2017 |
| 44 | திரு.எஸ்.சமரசிங்க பிரதி ஆணையாளர் | சர்வதேச நாணய நிதியத்தின் நாணய விவகார திணைக்களத்தினால் SARTTAC இல் முன்னெடுக்கப்பட்ட சர்வதேச VAT/GST செயலமர்வு | இந்தியா | 24.09.2017-30.09.2017 |
| 45 | திரு.எச்.ரி.ஜீ.எல்.ஆர்.அபேசேகர பிரதி ஆணையாளர் | சர்வதேச நாணய நிதியத்தின் நாணய விவகார திணைக்களத்தினால் SARTTAC இல் முன்னெடுக்கப்பட்ட சர்வதேச VAT/GST செயலமர்வு | இந்தியா | 24.09.2017-30.09.2017 |
| 46 | திரு.கே.டப்.கே.நந்தசிறி பிரதி ஆணையாளர் | வரிவிதிப்பனவினை அரச நிருவாகம் மூலம் ஒழுங்கமைக்கும் செயலமர்வு (SAT) | சீனா | 11.10.2017-31.10.2017 |
| 47 | திரு.கே.என்.என்.கஹவிதன பிரதி ஆணையாளர் | சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் தொடர்பான வரி இணக்கப்பாடு மற்றும் மீளாய்வினை முகாமை செய்தல் | சீனா | 09.04.2017-16.04.2017 |
| 48 | செல்வி.எச்.எஸ்.வை.சொய்சா பிரதி ஆணையாளர் | முகாமைத்துவம் தொடர்பான சர்வதேச நிகழ்ச்சித்திட்டம் | தாய்லாந்து | 19.03.2017-26.03.2017 |
| 49 | திரு.கே.ஏ.எஸ்.விஜிதகுமார பிரதி ஆணையாளர் | வரிவிதிப்பனவினை அரச நிருவாகம் மூலம் ஒழுங்கமைக்கும் செயலமர்வு (SAT) | சீனா | 11.10.2017-31.10.2017 |
| 50 | செல்வி.சி.ஜே.கமரத்ன பிரதி ஆணையாளர் | வரிவிதிப்பனவினை அரச நிருவாகம் மூலம் ஒழுங்கமைக்கும் செயலமர்வு (SAT) | சீனா | 11.10.2017-31.10.2017 |
| 51 | செல்வி.எம்.எம்.கொரேரா பிரதி ஆணையாளர் | முகாமைத்துவம் தொடர்பான சர்வதேச நிகழ்ச்சித்திட்டம் | தாய்லாந்து | 19.03.2017-26.03.2017 |
| 52 | திரு.பி.டி.என்.பி.குமார உதவி ஆணையாளர் | வரிவிதிப்பனவினை அரச நிருவாகம் மூலம் ஒழுங்கமைக்கும் செயலமர்வு (SAT) | சீனா | 11.10.2017-31.10.2017 |

# பகுதி II

# வரி நிருவாகம்

IRDSL

IRDSL

# அத்தியாயம் 2
# வருமான சேகரிப்பு

IRDSL

IRDSL

உள்நாட்டு இறைவரித் திணைக்களமானது அரசாங்க வருமான சேகரிப்பில் 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ரூபா. 836,517,705,134/- (அரசிறை கொள்கை திணைக்களத்தின் கீழ் கணக்கு வைக்கப்பட்டுள்ள சமூகப் பொறுப்பு வரி, மாகாண சபைகளுக்கு முழுமையாக மாற்றப்பட்ட முத்திரைத் தீர்வை மற்றும் மாகாண சபைக்கு மாற்றப்பட்ட தேசக்கட்டுமான வரியின் கீழான வரி சேகரிப்பின் 1/3 உள்ளடங்கலாக) இனை தேறிய வருமானமாக சேகரித்துள்ளது. பல்வேறுபட்ட வரிகளின் சேகரிப்புக்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் பேணப்பட்டு வந்த மொத்த கோவைகளின் எண்ணிக்கையானது 2017.12.31 ஆந் திகதியன்று 1,409,944 ஆக இருந்துள்ளது.

### 2.1 வரி செலுத்துனர்கள் மற்றும் வரிக் கோவைகளின் எண்ணிக்கை

குறித்த ஆண்டின் இறுதியில் கொடுப்பனவுக்காக திணைக்களத்தில் பதிவு செய்துள்ள ஆட்களின் எண்ணிக்கையானது, அட்டவணை 2.1 இல் தரப்பட்டுள்ளது.

| **அட்டவணை 2.1 - 2017.12.31 அன்றுள்ளவாறு வரி செலுத்துனர்களின் எண்ணிக்கையும் வரிக் கோவைகளும்** | | |
|---|---|---|
| **வருமான வரி** | | |
| ***கூட்டிணைவு நிறுவனங்கள்*** | | |
| வதிவுள்ள கம்பனிகள் /வதிவற்ற கம்பனிகள் | 49,000 | **49,000** |
| ***கூட்டிணைவில்லா நிறுவனங்கள்*** | | |
| தனிப்பட்டவர்கள் | 133,871 | |
| பங்குடமையாளர்கள் | 12,907 | |
| ஆட்களின் குழுமங்கள் | 804 | |
| உ.பொ.செ.திட்டத்தின் கீழ் வருமான வரி செலுத்தும் ஊழியர்கள் (2017.03.31 இல் உள்ளவாறு)* | 1,051,364 | 1,198,946 |
| **மொத்த வருமான வரி செலுத்துனர்கள்** | | **1,247,946** |
| ***ஏனைய வரி செலுத்துனர்கள்*** | | |
| பொ.சே.கட்டணத்திற்காக பதிவு செய்யப்பட்ட ஆட்கள் மற்றும் பங்குடமையாளர்கள்(ESC) | 11,159 | |
| பெறுமதி சேர் வரிக்காக பதிவு செய்த ஆட்கள்(VAT) | 23,695 | |
| நிதிச் சேவைகள் மீதான பெறுமதி சேர் வரிக்காகப் பதிவு செய்யப்பட்ட ஆட்கள் | 233 | |
| தேசக் கட்டுமான வரிக்காக பதிவு செய்த ஆட்கள்(NBT) | 96,468 | |
| நிதிச் சேவைகள் மீதான தேசக் கட்டுமான வரிக்காகப் பதிவு செய்யப்பட்ட ஆட்கள் | 223 | |
| பந்தய அறவீட்டு கோவைகள் | 605 | |
| சூதாட்ட அறவீட்டு கோவைகள் | 5 | |
| **மொத்த ஏனைய வரி செலுத்துனர்கள்** | | **132,398** |
| உ.பொ.செ.வரி திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட தொழில்தருநர்கள்** | 19,469 | |
| வட்டி மீதான நிறுத்தி வைத்தல் வரி (நிறுத்தி வைத்தல் முகவர்கள்)*** | 409 | |
| விதித்துரைக்கப்பட்ட கட்டணங்கள் மீதான நிறுத்தி வைத்தல் வரி (முறையாக மாதாந்த அட்டவணைகளை அனுப்புவோர்) | 465 | |
| முத்திரைத் தீர்வை (முறையாக மாதாந்த அட்டவணைகளை அனுப்புவோர்) | 9,257 | **29,600** |
| **2017.12.31 இலுள்ளவாறு வரி செலுத்துனர்கள் / வரிக் கோவைகளின் மொத்த எண்ணிக்கை** | | **1,409,944** |

## 2.2 மொத்த இறைவரி சேகரிப்பு

குறித்த ஆண்டுக்கான மொத்த வருமான சேகரிப்பான ரூபா 836,517 மில்லியனானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், ரூபா 194,970 மில்லியனால் அதிகரித்துள்ளது. இந்த அடைவானது பிரதானமாக, இணக்கப்பாட்டின் வசதிப்படுத்தல் மற்றும் அமுலாக்கலுக்கான வரி நிருவாகத்தினால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளின் காரணமாகவே சாத்தியமாகியுள்ளது. பொறுப்புக்கள் மற்றும் வரிகளின் சேகரிப்பு தொடர்பில் வரி செலுத்துனர்களின் மதிப்பீட்டினை இனங்காண்பதானது குறித்த அதிகரிப்பினை மேலும் தீவிரமாக்குவதற்கு ஏதுவாக அமைந்திருந்தது.

குறித்த ஆண்டில் அரசாங்க வருமானத்திற்கு பங்களிப்புச் செய்யப்பட்ட மொத்த உள்நாட்டு இறைவரி விகிதாசாரம் 45.67% ஆக இருந்துள்ளது. ஒத்திசைவான மதிப்பீடுகளுடனான ஒவ்வொரு வரி வகைகளின் கீழான வருமானத்துடன் ஒப்பிடுகையில் மொத்த வருமான சேகரிப்பானது இத்தகைய அடைவின் 99.84% இனைக் குறிப்பிடுகின்றது. தேறிய வருமான சேகரிப்பின் ஒத்திசைவான மதிப்பீடுகளுடனான ஒவ்வொரு வரி வகையின் கீழ் வருமானத்தினை ஒப்பிடும்போது மொத்த வருமான சேகரிப்பானது (நாணயக் கொள்கை திணைக்களத்தின் கீழ் சேர்க்கப்படுகின்ற சமூகப் பொறுப்பு விதிப்பனவு மற்றும் மாகாண சபைகளுக்கு மாற்றப்பட்ட முத்திரைத் தீர்வை வரி மற்றும் மாகாண சபைகளுக்கு மாற்றப்பட்ட தேசக் கட்டுமான வரியின் கீழான சேகரிப்பின் 1/3) 94.57% இனைக் குறிப்பிடுகின்றது.

2016 ஆம் ஆண்டில் 37.16% ஆக இருந்த வருமான வரி சேகரிப்பானது 2017 இல் 27.48% இற்கு குறைவடைந்துள்ள அதேவேளையில், பெயரளவிலான நியதிகள் 7.03 இனால் வீழ்ச்சியடைந்துள்ளது. அதாவது முன்னையை அண்டில் ரூபா.238,398 மில்லியனிலிருந்து 2017 ஆம் ஆண்டில் ரூபா.229,841 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்துள்ளது. எவ்வாறாயினும், குறித்த ஆண்டுக்கான மதிப்பீட்டுடன் ஒப்பிடுகையில் வருமான வரி சேகரிப்பானது 11.6% பற்றாக்குறையினைப் பிரதிபலிக்கின்றது. இந்த வீழ்ச்சிக்கான காரணம், ஏற்படுகின்ற நட்டத்தினை அல்லது வருமானவரியிலிருந்து விலக்களிப்புப் பெற்றதனைக் கவனத்தில் கொள்ளாது கொடுப்பனவிற்கு உரித்துடைய ஒவ்வொரு ஆளினாலும் மேற்கொள்ளப்பட்ட பொருளாதார சேவைக் கட்டணத்தில் மேற்கொண்ட திருத்தங்களேயாகும்.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் பெசேவ சேகரிப்பானது 24.42% இனாலும் அதன் பெயரளவுப் பெறுமதியில் ரூபா. 69,214 இனாலும் அதிகரித்துள்ளது. இத்தரிப்புக்கான காரணமாக பொறுப்பாகும் புரள்வு எல்லைகள் குறைவடைந்தமையும்பெசேவ வீதமானது 15% இற்கு குறைவடைந்தமையினையும் குறிப்பிடலாம்.

2016 வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளில் எடுக்கப்பட்ட கொள்கைத் தீர்மானத்தின்படி, வரி வீதம் அதிகரிக்கின்ற அதேவேளையில் பொருளாதார சேவைக் கட்டண அறவீட்டிலிருந்து இலாபமீட்டும் வியாபாரத்தினை உள்ளடக்காமையினை நீக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க, பொருளாதார சேவைக்கட்டண சேகரிப்பானது முன்னைய ஆண்டுக்கெதிராக கணிசமான அதிகரிப்பினைக் காட்டுகின்றது.

ஒத்திசைவான மதிப்பீடுகளுடனான ஒவ்வொரு வரி வகையின் கீழான வருமான ஒப்பீடானது அட்டவணை 02 இல் தரப்பட்டுள்ளதுடன், வரைபடம் 01 இன் மூலமாகவும் விபரிக்கப்பட்டுள்ளது. குறித்த ஆண்டு காலப்பகுதிக்கான காசுப் பாய்ச்சலானது அட்டவணை 03 இல் காட்டப்பட்டுள்ளதுடன், அது வரைபு 02 இன் மூலமாக விபரிக்கப்பட்டுள்ளது.


**அட்டவணை 2.2 – மொத்த வருமான சேகரிப்பு – 2017**

| வருமான மதிப்பீடு ரூபா (திருத்தப்பட்டது) | வருமான மதிப்பீடு ரூபா (திருத்தப்பட்டது) | வருமான மதிப்பீடு ரூபா (திருத்தப்பட்டது) | வருமான மதிப்பீடு ரூபா (திருத்தப்பட்டது) | வருமான மதிப்பீடு ரூபா (திருத்தப்பட்டது) |
|---|---|---|---|---|
| வருமான வரி | 224,300,000,000 | 238,398,610,641 | 106.29% | 37.16% |
| பொருளாதார சேவைக் கட்டணம் | 21,000,000,000 | 20,458,175,363 | 97.42% | 3.19% |
| பந்தய மற்றும் சூதாட்ட வரி | 900,000,000 | 1,884,498,652 | 209.39% | 0.29% |
| பங்கு கொடுக்கல்வாங்கல் வரி | 1,900,000,000 | 737,659,559 | 38.82% | 0.11% |
| பெறுமதிசேர் வரி | 270,000,000,000 | 283,451,513,780 | 104.98% | 44.18% |

| | | | | |
|---|---|---|---|---|
| பொருட்கள் சேவைகள் வரி | - | 1,585,883 | - | 0.00% |
| புரள்வு வரி | - | 16,639,038 | - | 0.00% |
| தேசிய பாதுகாப்பு அறவீடு | - | 8,091,202 | - | 0.00% |
| நிருமாணக் கைத்தொழில் உத்தரவாத நிதிய விதிப்பனவு | 250,000,000 | 258,801,839 | 103.52% | 0.04% |
| தேசக் கட்டுமான வரி | 54,000,000,000 | 84,066,526,724 | 141.48% | 13.10% |
| முத்திரைத் தீர்வை | - | 10,650,973,620 | - | 1.66% |
| காணி வரி | - | 22,665,680 | - | 0.00% |
| வாகன உரித்துடமை வரி | 750,000,000 | 1,579,133,507 | 210.55% | 0.25% |
| குடியகல்வு வரி | 15,000,000 | 11,054,550 | 73.70% | 0.00% |
| சமூகப் பொறுப்பு வரி | - | 836,043 | - | 0.00% |
| **மொத்த இறைவரி சேகரிப்பு** | **573,115,000,000** | **641,546,766,081** | **111.94%** | **100.00%** |

**வரைபு 01**


**மொத்த வருமான சேகரிப்பு- 2017**




## 2.3. மொத்த வருமானப் பாய்ச்சல்

| அட்டவணை 2.3 - மொத்த இறைவரிப் பாய்ச்சல் 2017 | | |
|---|---|---|
| **மாதம்** | **வருமான சேகரிப்பு ரூபா** | **திரட்டிய வருமான சேகரிப்பு ரூபா** |
| **ஜனவரி** | 79,756,429,537.27 | 79,756,429,537.27 |
| **பெப்ரவரி** | 63,916,411,803.24 | 143,672,841,340.51 |
| **மார்ச்** | 62,413,455,936.54 | 206,086,297,277.05 |
| **ஏப்ரல்** | 71,908,338,157.40 | 277,994,635,434.45 |
| **மே** | 71,129,846,329.36 | 349,124,481,763.81 |


| | | |
|---|---|---|
| **ஜூன்** | 52,025,081,056.46 | 401,149,562,820.27 |
| **ஜூலை** | 68,866,903,035.39 | 470,016,465,855.66 |
| **ஆகஸ்ட்** | 72,842,785,905.04 | 542,859,251,760.70 |
| **செப்டெம்பர்** | 74,035,803,021.06 | 616,895,054,781.76 |
| **ஒக்டோபர்** | 70,134,959,443.65 | 687,030,014,225.41 |
| **நவம்பர்** | 78,948,715,454.80 | 765,978,729,680.21 |
| **டிசெம்பர்** | 67,267,533,845.07 | **833,246,263,525.28** |




## 2.4 முன்னைய ஆண்டுடனான வருமான ஒப்பீடு

| 2.4 முன்னைய ஆண்டுடனான வருமான ஒப்பீடு | | | |
|---|---|---|---|
| வரி வகை | 2017 வருமான சேகரிப்பு ரூபா: | 2016 வருமான சேகரிப்பு ரூபா: | சேகரிப்பில் உள்ளவாறான அதிகரிப்பு/ வீழ்ச்சி % |
| வருமான வரி | 229,841,806,636 | 238,398,610,641 | -3.59% |
| பொருளாதார சேவைக் கட்டணம் | 44,719,757,960 | 20,458,175,363 | 118.59% |
| பந்தய மற்றும் சூதாட்ட வரி | 1,929,034,608 | 1,884,498,652 | 2.36% |
| பங்கு கொடுக்கல்வாங்கல் வரி | 1,333,904,584 | 737,659,559 | 80.83% |
| பெறுமதிசேர் வரி | 443,739,474,789 | 283,451,513,780 | 56.55% |

| | | | |
|---|---|---|---|
| பொருட்கள் சேவைகள் வரி | 115,977 | 1,585,883 | -92.69% |
| புரள்வு வரி | 20,753,568 | 16,639,038 | 24.73% |
| தேசிய பாதுகாப்பு அறவீடு | 15,947,317 | 8,091,202 | 97.09% |
| நிர்மாண கைத்தொழில் உத்தரவாத அறவீட்டு நிதியம் | 52,769,318 | 258,801,839 | -79.61% |
| தேசக் கட்டுமான வரி | 101,824,565,352 | 84,066,526,724 | 21.12% |
| முத்திரைத் தீர்வை | 11,377,134,752 | 10,650,973,620 | 6.82% |
| காணி வரி | 7,382,158 | 22,665,680 | -67.43% |
| வாகன உரித்துடமை விதிப்பனவு | 1,650,961,000 | 1,579,133,507 | 4.55% |
| குடியகல்வு வரி | 4,097,115 | 11,054,550 | -62.94% |
| சமூகப் பொறுப்புணர்வு வரி | - | 836,043 | -100.00% |
| **மொத்த இறைவரி சேகரிப்பு** | **836,517,705,134** | **641,546,766,081** | **30.39%** |




## 2.5 முத்திரைத் தீர்வை, தேசக் கட்டுமான வரி என்பவற்றின் வருமானத்தினை மாகாண சபைகளுக்கு மாற்றுதல்

2011 ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளுக்கமைவாக மேற்கொள்ளப்பட்ட உரிய சட்டவாக்கத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் சேகரிக்கப்பட்ட பின்வரும் வருமான வகையீடுகள் மாகாண சபைகளுக்கு மாற்றப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| தேசக்கட்டுமான வரி சேகரிப்பில் | 33.33% |
| முத்திரைத் தீர்வை சேகரிப்பில் | 100% |

அட்டவணை 04 ஆனது மொத்த சேகரிப்பு மற்றும் உரிய வரிகளின் மாகாண சபைகளுக்கு மாற்றப்பட்ட வரி வருமான தொகை என்பனவற்றினைக் காட்டுகின்றது.

| அட்டவணை 2.5 – வரி வருமானத்தினை மாகாண சபைகளுக்கு மாற்றுதல் - 2017 | | | |
|---|---|---|---|
| | மொத்த சேகரிப்பு (ரூபா) | மாகாண சபைகளுக்கு மாற்றல் தொகை (ரூபா) | % |
| தேசக் கட்டுமான வரி | 101,824,565,352 | 32,789,366,798 | 33.33% |
| முத்திரைத் தீர்வை | 11,377,134,752 | 11 377 134,752 | 100% |

## 2.6 வருமான சேகரிப்பு – சுய மதிப்பீடும் ஏனையவையும்

உத்தியோகபூர்வ வரி மதிப்பீடுகளின் மூலமான மொத்த சேகரிப்பில் அநேகமாக முழுமையாக பங்களிப்புச் செய்த சுய மதிப்பீடுகளுக்கான கொடுப்பனவுகள் (இறக்குமதிகள் மீதான பெறுமதி சேர் வரி மற்றும் தேசக் கட்டுமான வரி நீங்கலாக) குறித்த ஆண்டிற்கான மொத்த வருமான வரி திரட்டின் 6% ஆக மாத்திரம் அமைந்திருந்தது. முன்னைய ஆண்டிற்கான மதிப்பீடுகளுடன் ஒப்பிடுகையில் பெறப்பட்ட வருமான சேகரிப்பானது சிறிய அதிகரிப்பினைப் பிரதிபலிக்கின்றது. இது சுய மதிப்பீடுகளின் அடிப்படையில் வருமானத்தினை சேகரிக்கும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் நோக்கத்தின் முதன்மைப் பகுதியான சுய இணக்கப்பாட்டினை ஊக்குவிப்பதற்காக எடுக்கப்பட்ட முயற்சிகளின் வெற்றியினைக் காட்டுகின்றது. இது தொடர்பில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் இந்த வெற்றிக்குத் தேவையான வசதிகள் தொடர்ந்தும் அளிக்கப்பட்டன. அட்டவணை 2.6 ஆனது தொகைகளுக்கிடையிலான ஒப்பீட்டினைக் காட்டுகின்றது.

| அட்டவணை 2.6 :- சுய மதிப்பீடு மற்றும் ஏனையவற்றின் அடிப்படையிலான சேகரிப்பின் ஒப்பீட்டு ரீதியான பகுப்பாய்வு | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 2015 (ரூபா'000) | | 2016 (ரூபா'000) | | 2017 (ரூபா'000) | |
| | சுய மதிப்பீடு | பிற | சுய மதிப்பீடு | சுய மதிப்பீடு | பிற | சுய மதிப்பீடு |
| வருமான வரி | 256,434,940 | 11,539,082 | 220,471,725 | 17,926,886 | 217,555,269 | 12,286,538 |
| பெசேவ (இறக்குமதிகள் மீதான பெசேவ நீங்கலாக) | 130,510,553 | 4,688,017 | 161,404,285 | 6,710,993 | 269,545,383 | 5,801,137 |
| தேகவ (இறக்குமதிகள் மீதான பெசேவ நீங்கலாக) | 41,419,548 | 1,445,941 | 53,290,159 | 2,313,174 | 69,034,384 | 4,009,688 |
| ஏனையவை | 113,907,066 | 477,215 | 34,757,043 | 873,072 | 60,358,388 | 753,469 |
| மொத்தம் | **542,272,107** | **18,150,255** | **469,923,212** | **27,824,125** | **616,493,424** | **22,850,832** |
| மொத்த வருமானத்தின் நூற்று வீதம் % (இறக்குமதிகள் மீதான பெசேவ மற்றும் தேகவ நீங்கலாக) | 97% | 3% | 94% | 6% | 96% | 4% |

## 2.7 அரசாங்க வருமானத்திற்கான உள்நாட்டு இறைவரியின் பங்களிப்பு


அட்டவணை 2.7 ஆனது 2017 இல் அரசாங்க வருமானத்திற்கு உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் செய்யப்பட்ட பங்களிப்பு மற்றும் அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தி என்பனவற்றுடன் கடந்த நான்கு ஆண்டுகளில் அதன் போக்குகளையும் காட்டுகின்றது. வரைபு 04 ஆனது இத்தகைய பங்களிப்புக்களையும் விபரிக்கின்றது. 2017 இல் மொத்த அரசாங்க வருமானமானது ரூபா 1,831,531 மில்லியனுக்கு (நிதி திட்டமிடல் அமைச்சின் வருடாந்த அறிக்கை – 2017) அதிகரித்துள்ளதுடன், மொத்த அரசாங்க வருமானத்திற்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திலிருந்து 45.67% பங்களிப்புச் செய்யப்பட்டுள்ளதையும் பதிவு செய்துள்ளது

உள்நாட்டு மொத்த உற்பத்தியின் சதவீதமாக உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் சேகரிக்கப்பட்ட வருமானமானது தொடர்ந்து வீழ்ச்சியடைந்து வந்துள்ளதுடன், 2017 இல் 6.29% வீதத்தினைக் காட்டியுள்ளது. வரி ஊக்குவிப்புக்கள், விடுமுறைகள், விலக்களிப்புக்கள் மற்றும் சலுகை அடிப்படையிலான வரி வீதங்களின் அறிமுகமானது விகிதாசார வீழ்ச்சிப் போக்கிற்கு காரணமாக அமையலாம்.

**அட்டவணை 2.7 – அரசாங்க வருமானத்திற்கு உள்நாட்டு இறைவரியின் பங்களிப்பும் பாரிய பொருளாதார நடவடிக்கைகளின் நடைமுறை விலைகளில் மொ.உ.உற்பத்தியும்**

| ஆண்டு | அரசாங்க வருமானம் ரூபா மில்.* | உ.இ.தி. சேகரிப்பு ரூபா மில். | அரசாங்க வருமானத்திற்கு உள்நாட்டு இறைவரியின் சேகரிப்பு % | பாரிய பொருளாதார நடவடிக்கைகளின் நடைமுறை விலைகளில் மொ.உ.உற்பத்தியும் ரூபா மில்.** | மொ.உ.உ. உள்நாட்டு இறைவரியின் சேகரிப்பு விகிதாசாரம் |
|---|---|---|---|---|---|
| 2013 | 1,137,447 | 492,539 | 43.30% | 8,674,230 | 5.68% |
| 2014 | 1,195,206 | 514,161 | 43.02% | 9,784,672 | 5.25% |
| 2015 | 1,454,878 | 560,422 | 38.52% | 11,183,220 | 5.01% |
| 2016 | 1,686,061 | 641,547 | 38.05% | 11,838,975 | 5.42% |
| 2017 | 1,831,531 | 836,518 | 45.67% | 13,289,466 | 6.29% |

மூலம்: - * நிதி திட்டமிடல் அமைச்சு (ஆண்டறிக்கை) ** இலங்கை மத்திய வங்கி (ஆண்டறிக்கை)



## 2.8 வரி விபரத்திரட்டு இணக்கப்பாடு

வரி செலுத்துனர்கள் சுய மதிப்பீட்டின் அடிப்படையில் உரிய நேரத்தில் வரி விபரத்திரட்டுக்களை நிரப்பி வரி செலுத்துவதனை ஊக்குவிக்கும் நிகழ்ச்சித் திட்டமானது, குறித்த ஆண்டிலும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டது. சிறப்புரிமை அட்டைகளை (தங்கம் மற்றும் வெள்ளி) பரிசளித்தல், மோட்டார் வாகனங்களின் இறக்குமதி மீது வரிச் சலுகைகளை வழங்குதல், முன்கூட்டிய வரிக் கொடுப்பனவுகள் மீது கழிவுகள் வழங்குதல் போன்ற சுய இணக்கப்பாட்டினை விரிவாக்கும் நோக்குடன் தனிநபர் வரி செலுத்துனர்களுக்கு பயனளிக்கும் வகையிலான செயற்பாடுகள் தொடர்ந்தும் வினைத்திறனுடன் முன்னெடுக்கப்பட்டன.

அதற்கிணங்க, 2015/2016 வரி மதிப்பாண்டு காலப்பகுதியில் உரிய திகதியிலுள்ள நிறுவனமல்லா வருமான வரி விபரத்திரட்டுக்களை கோவைப்படுத்தும் வீதாசாரமானது 48% ஆக இருந்துள்ளதுடன், குறித்த காலப்பகுதியிலிருந்தான ஒரு மாத காலப்பகுதியினுள் இது 59% இற்கு அதிகரித்திருந்தது. உரிய திகதியிலிருந்து இரண்டு மாதங்களின் பின்னரான இணக்கப்பாட்டு வீத வரியானது நிறுவனத் துறையில் 68% இல் இருந்துள்ளது.

நிறுவன துறையினைப் பொறுத்தவரையில், உரிய திகதியில் 30% ஆக இருந்துள்ளதுடன், உரிய திகதியிலிருந்து ஒரு மாத காலப்பகுதியினுள் 46% ஆகவும் இருந்துள்ளது. நிறுவன வரி வீதமானது உரிய திகதியிலிருந்தான இரண்டு மாதங்களிலுள்ளான இணக்கப்பாட்டு வீத வரியானது 48% இல் இருந்துள்ளது.

அனைத்து வரிகளினதும் விபரத்திரட்டு இணக்கப்பாட்டு வீதமானது சுய வரி மதிப்பீட்டு முறைமையில் எதிர்பார்க்கப்படாத மட்டமொன்றினூடாகவேனும் பெரும்பாலும் நிலையானதாக இருந்துள்ளது. எவ்வாறாயினும், விபரத்திரட்டு இணக்கப்பாட்டினை அடைவதற்கான நடவடிக்கைகளினைத் தொடர்ந்தும் முன்னெடுத்துள்ளது. எவ்வாறாயினும், மீளாய்வு ஆண்டிலுள்ள தேசக் கட்டுமான வரி வீதத்திலும் கணிசமான வீழ்ச்சியினைக் காட்டுகின்றது. குறித்த ஆண்டு காலப்பகுதியில், திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட கள மதிப்பாய்வின் கீழ் தேசக் கட்டுமான வரியுடனான 75,811 புதிய வரி செலுத்துனர்கள் பதிவு செய்யப்பட்டார்கள். இத்தகைய வீழ்ச்சிக்கான காரணமாக விபரத்திரட்டுக்களினைச் சமர்ப்பிப்பது தொடர்பில் அத்தகைய வரி செலுத்துனர்கள் சரியான புரிந்துணர்வினைக் கொண்டிருக்காமையினைக் காரணமாக குறிப்பிடலாம். அட்டவணை 07 ஆனது கொடுப்பனவுத் திகதியிலுள்ளதும், 2011/2012 இலிருந்து 2015/2016 வரையிலான ஆண்டுகளின் கொடுப்பனவுத் திகதியிலிருந்து ஒரு மாதத்தினுள்ளான வருமான வரி விபரத்திரட்டு இணக்கப்பாட்டினையும் காட்டுகின்றது. அட்டவணை 08 ஆனது ஏனைய வரிகள் மீதான விபரத்திரட்டு இணக்கப்பாட்டு வீதங்களினைக் காட்டுகின்றது.

**அட்டவணை 2.8.1– வருமான வரி விபரத்திரட்டு இணக்கப்பாடு 2012/2013 – 2016/2017**

| வரி மதிப்பீட்டாண்டு | துறை | முடிவுத் திகதி மீதான இணக்கப்பாடு | முடிவுத் திகதியிலிருந்து ஒரு மாத காலத்தினுள்ளான இணக்கப்பாடு |
|---|---|---|---|
| 2012/2013 | நிறுவனம் | 56% | 70% |
| | நிறுவனமல்லாத | 41% | 54% |
| 2013/2014 | நிறுவனம் | 53% | 61% |
| | நிறுவனமல்லாத | 42% | 57% |
| 2014/2015 | நிறுவனம் | 52% | 58% |
| | நிறுவனமல்லாத | 47% | 62% |
| 2015/2016 | நிறுவனம் | 30% | 46% |
| | நிறுவனமல்லாத | 48% | 59% |
| 2016/2017 | நிறுவனம் | 41% | 45% |
| | நிறுவனமல்லாத | 45% | 56% |

| அட்டவணை 2.8.2 – ஏனைய வரிகள் மீதான விபரத்திரட்டு இணக்கப்பாடு | | | | |
|---|---|---|---|---|
| வருடம் | பெசேவ | தேகவ | உபொசெவ | |
| 2015 ஆண்டு | 65% | 86% | வரி மதிப்பீட்டாண்டு 2013/2014 | 63% |
| 2016 ஆண்டு | 71% | 31% | வரி மதிப்பீட்டாண்டு 2014/2015 | 57% |
| 2017 ஆண்டு | 47% | 21% | வரி மதிப்பீட்டாண்டு 2015/2016 | 14% |

## 2.9. வருமான வரி சேகரிப்பு


கூட்டிணைவு வருமான வரி, தனிநபர் வருமான வரி, பங்கிலாப வரி மற்றும் வட்டி மீதான நிறுத்தி வைத்தல் வரி என்பன உள்ளடங்கலான நிறுவன வருமான வரி என்பவற்றிலிருந்தான வருமான சேகரிப்பானது 2017 இல் ரூபா 229,842 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்திருந்தது. இது 2016 இல் சேகரிக்கப்பட்ட ரூபா 238,398 மில்லியனுடன் ஒப்பிடுகையில், 3.72% வீழ்ச்சியாகும். உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் குறித்த ஆண்டுக்கான மொத்த வருமான வரி சேகரிப்பானது அதன் மொத்த வருமானத்தில் 27.48% ஆகும். இது 2016 இல் 37.16% ஆகவும் இருந்துள்ளது.

### 2.9.1 வருமான வரி சேகரிப்பு – துறை ரீதியான வகுப்பாக்கம்

மொத்த வருமான வரி சேகரிப்புக்கான நிறுவன துறையிலிருந்தான பங்களிப்பானது சேகரிக்கப்பட்ட மொத்த வருமான வரியில் ரூபா 144,134 மில்லியன் அல்லது 60% ஆகும். நிறுவனமல்லா துறையானது ரூபா 94,265 மில்லியனை அல்லது 40% பங்களிப்பினை வழங்கியுள்ளது.
அட்டவணை 2.9.1 அதன் பொழிப்பினைக் காட்டுவதுடன் வரைபு 05 அது தொடர்பில் விபரிக்கின்றது.

| அட்டவணை 2.9.1 : - நிறுவனம் மற்றும் நிறுவனமல்லாத வருமான வரி சேகரிப்பு – 2016 & 2017 | | | | |
|---|---|---|---|---|
| | 2017 | | 2016 | |
| | வரி சேகரிப்பு (ரூபா) | % | வரி சேகரிப்பு (ரூபா) | % |
| **நிறுவனம் *** | 132,871,563,934 | 58% | 144,133,758,898 | 60% |
| **நிறுவனமல்லாத **** | 96,970,242,702 | 42% | 94,264,851,743 | 40% |
| **மொத்தம்** | **229,841,806,636** | **100%** | **238,398,610,641** | **100%** |

* 2016 இல் 15,902 மில்லியன் மற்றும் 2017 இல் 17,074 மில்லியன் பங்கிலாப வரிகள் உள்ளடங்கலாக




### 2.9.2 மூலத்தின் அடிப்படையிலான வருமான வரி சேகரிப்பு பகுப்பாய்வு

அட்டவணை 2.9.2 ஆனது குறித்த ஆண்டு காலப்பகுதியில் சேகரிக்கப்பட்ட மூலத்தின் அடிப்படையிலான வருமான வரி பகுப்பாய்வின் பொழிப்பினை (ஊழியம் மற்றும் ஏனையவை) காட்டுகின்றது.

| அட்டவணை 2.9.2 - வருமான வரி சேகரிப்பு - 2017 | | |
|---|---|---|
| **மூலம்** | சேகரிப்பு (ரூ.மில்.) | |
| **ஊழியம்** | | |
| உ.பொ.செ.வரி திட்டம் | 32,466.24 | |
| தவறுகையிலுள்ள வரிக்கான தண்டப்பணம் பற்றிய மதிப்பீடுகள் | 454.02 | **32,920.26** |
| **ஏனையவை** | | |
| சுய மதிப்பீடு மற்றும் தண்டப் பணம் பற்றிய மதிப்பீடுகள் | 116,374.25 | |
| ஆண்டுக் கட்டணங்கள், வேத்துரிமைக் கட்டணங்கள் அல்லது முகாமைத்துவக் கட்டணங்களின் கொடுப்பனவுகள் மீதான நிறுத்தி வைத்தல் வரி | 55,333.81 | |
| பிற மூலத்தின் கழிப்பனவு | 25,258.12 | |
| **மொத்த சேகரிப்பு** | | **229,886.44** |
| கழி: மீளளிப்பு | | (44.63) |
| **தேறிய சேகரிப்பு** | | **229,841.81** |

நிறுத்தி வைத்தல் வரி முறைமையினுள் உள்ளடங்காத வர்த்தகம், வியாபாரம், உயர் தொழில், வாழ்க்கைத் தொழில் மற்றும் ஏனைய சேவைகள் மீதான வரிகள் கொண்டிருக்கின்ற தண்டப் பணங்களினுடனான சுய மதிப்பீடுகள் மற்றும் மதிப்பீடுகளின் மூலமான தொகை ரூபா 116,374 ஆகும்.

## 2.10. பெறுமதி சேர் வரி சேகரிப்பு

குறித்த ஆண்டு காலப்பகுதியில் பெறுமதி சேர் வரி சேகரிப்பானது, முன்னைய ஆண்டுக்கென மதிப்பீடு செய்யப்பட்ட தொகையான ரூபா 283,451 மில்லியனுடன் உடன் ஒப்பிடுகையில் ரூபா 160,288 மில்லியன் அதிகரிப்பினை அல்லது 32.31% வளர்ச்சியினைப் பதிவு செய்துள்ளது. குறித்த ஆண்டுக்கான மதிப்பீடான ரூபா.450,000 மில்லியனுடன் ஒப்பிடுகையில் குறித்த ஆண்டுக்கான வருமானமானது ரூபா 6,250 மில்லியன் வீழ்ச்சியினைக் காட்டுகின்றது. .
பதிவு செய்தலுக்கான வரி எல்லைக் குறு மட்டத்தினைக் குறைத்தல், பெசேவ வீதத்தினைக் அதிகரித்தல், குறித்த சில விலக்களிப்புக்களினை நீக்குதல் மற்றும் RAMIS கருத்திட்டத்தின் கீழ் நிருவாக முறையிலான மாற்றங்களை அமுல்படுத்துதல் என்பன பெசேவ வருமானத்தினை அதிகரிப்பதற்கு துணை புரிந்துள்ளன. உள்நாட்டு வழங்கல்கள் மற்றும் இறக்குமதிகளின் மீது சேகரிக்கப்பட்ட பெசேவ ஆனது முன்னைய ஆண்டுக்கெதிராக அதிகரிப்பினைக் காட்டுகின்றது. குறித்த ஆண்டுக்காக சேகரிக்கப்பட்ட மொத்த உள்நாட்டு பெசேவ 275,346 மில்லியனாகும். இத் தொகையானது 2016 ஆம் ஆண்டுக்கான பெறுமதி சேர் வரியான ரூபா 168,115 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 63.78% அதிகமாகும். 2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இறக்குமதிகள் மீது சேகரிக்கப்பட்ட பெசேவ ரூபா.83,726 மில்லியனாக இருந்துள்ளதுடன் 2017 இல் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 46% அதிகரிபினைப் பதிவு செய்துள்ளது.


அட்டவணை 2.10.1 ஆனது 06 ஆம் வரைபில் சித்தரிக்கப்பட்டுள்ள பெறுமதி சேர் வரி மீளளிப்புக்கள் மற்றும் தேறிய சேகரிப்பு என்பவற்றின் துறை வாரியான மொத்தத்தினைக் காட்டுகின்றது.

**அட்டவணை 2.10.1 – பெறுமதி சேர் வரி மொத்த சேகரிப்பும் மீள் கொடுப்பனவுகளும்**

| துறை | 2016 | | 2017 | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | தேறிய சேகரிப்பு (ரூபா மில்.) | | மொத்த சேகரிப்பு (ரூபா மில்.) | | மீளளிப்பு | தேறிய சேகரிப்பு (ரூபா மில்.) | |
| **உற்பத்தித் துறை** | | 35,412.91 | | 76,523.50 | 677.19 | | 75,846.31 |
| **உற்பத்தியல்லா துறை** | | | | | | | |
| -சேவைகள் | 96,605.62 | | 149,488.08 | | 40.82 | 149,447.26 | |
| -நிதியியற் சேவைகள் | 36,096.75 | 132,702.37 | 50,052.95 | 199,541.03 | | 50,052.95 | 199,500.21 |
| -விருப்பு பெசேவ | | 115,336.23 | | 168,394.62 | 1.67 | | 168,392.95 |
| **இறக்குமதிகள்** | | **283,451.51** | | **444,459.15** | **719.68** | | **443,739.47** |
| **மொத்தம்** | | 35,412.91 | | 76,523.50 | 677.19 | | 75,846.31 |

**அட்டவணை 2.10.2 – மொ.உ.உற்பத்திக்கான பெ.சே.வரியின் பங்களிப்பு தொடர்பான துறை ரீதியான பகுப்பாய்வு**

| துறை | 2016 | | 2017 | | மொ.உ.உற்பத்தியில் பெசேவ சேகரிப்பின் சதவீதம் | |
|---|---|---|---|---|---|---|
| | தேறிய சேகரிப்பு (ரூபா) | % | தேறிய சேகரிப்பு (ரூபா) | % | 2016 | 2017 |
| **உற்பத்தித் துறை** | 35,412,908,090 | 12.49% | 75,846,312,316 | 17.09% | 0.29% | 0.57% |
| **உற்பத்தியல்லா துறை** | 132,702,369,902 | 46.82% | 199,500,207,439 | 44.96% | 1.12% | 1.50% |
| **இறக்குமதிகள் மீதான** | 115,336,235,788 | 40.69% | 168,392,955,034 | 37.95% | 0.97% | 1.26% |
| **மொத்தம்** | **283,451,513,780** | **100.00%** | **443,739,474,789** | **100.00%** | **2.39%** | **3.34%** |




### 2.10.1 பெறுமதி சேர் வரியின் கைத்தொழில் ரீதியான பகுப்பாய்வு

அட்டவணை 2.10.3 ஆனது ஒவ்வொரு துறையின் கீழ் வகைப்படுத்தப்பட்ட உள்நாட்டு வழங்கல்கள் மீதான பெசேவ மற்றும் மொத்தப் பெறுமதி சேர் வரிக்கான அவற்றின் பங்களிப்பு என்பவற்றினைக் காட்டுகின்றது.

**அட்டவணை 2.10.3 – பெ.சே.வரி உள்ளூர் மொத்தம் – உற்பத்தி மற்றும் சேவைகள் துறைகள்**

| Sector | 2015 (ரூபா மில்.) | 2016 (ரூபா மில்.) | முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சி /அதிகரிப்பு % | 2017 (ரூபா மில்.) | முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சி /அதிகரிப்பு % |
|---|---|---|---|---|---|
| வங்கித்தொழில் | 23,089 | 27,770 | 20.27% | 37,150 | 33.78% |
| காப்புறுதி | 5,403 | 6,371 | 17.92% | 7,313 | 14.79% |
| ஹோட்டல் மற்றும் சுற்றுலா விடுதி | 7,429 | 10,566 | 42.23% | 13,668 | 29.36% |
| நிர்மாணம் | 6,605 | 8,230 | 24.60% | 14,542 | 76.70% |
| மின்சாரம் மற்றும் வாயு | 501 | 526 | 4.99% | 674 | 28.14% |
| இறக்குமதிகள் | 9,880 | 9,383 | -5.03% | 10,143 | 8.10% |
| நிதியளிப்பு | 18,487 | 20,242 | 9.49% | 21,121 | 4.34% |
| தொடர்பாடல் | 376 | 7,429 | 1875.80% | 19,743 | 165.76% |
| பெற்றோலிய உற்பத்தி | 417 | 175 | -58.03% | 0 | -100.00% |
| குடிவகையும் மதுபானமும் | 396 | 1,553 | 292.17% | 18,802 | 1110.69% |
| வகைப்படுத்தப்படாத சேவைகள் | 12,295 | 39,690 | 222.81% | 82,024 | 106.66% |
| வகைப்படுத்தப்படாத உற்பத்திகள் | 9,173 | 29,079 | 217.01% | 56,641 | 94.78% |
| ஏனையவை | 36,460 | 36,091 | -1.01% | 50,053 | 38.69% |
| **மொத்தம்** | **130,511** | **197,105** | **51.03%** | **331,874** | **68.37%** |

## 2.11 தேசக் கட்டுமான வரி சேகரிப்பு

குறித்த ஆண்டுக்கான தேசக் கட்டுமான வரி சேகரிப்பானது மொத்த வருமானத்திற்கு ரூபா 101,824 மில்லியனை பங்களிப்புச் செய்துள்ளது. இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 21.12% அதிகரிப்பினைக் காட்டுகின்றது. மொத்த தேசக் கட்டுமான வரி வருமானத்தில் ரூபா 32,789 மில்லியன் மாகாண சபைகளுக்கு மாற்றப்பட்டுள்ளது.


**அட்டவணை 2.11.1 – தேசக் கட்டுமான வரி சேகரிப்புப் பகுப்பாய்வு – 2017**

| துறை | தேறிய சேகரிப்பு (ரூபா) | |
|---|---|---|
| | 2016 | 2017 |
| உற்பத்தி | 9,908,497,868 | 10,894,310,333 |
| சேவைகள் | 29,120,398,350 | 38,821,335,524 |
| இறக்குமதிகள் | 18,395,242,141 | 19,319,552,697 |
| **மொத்தம்** | **57,424,138,359** | **69,035,198,554** |

அட்டவணை 2.11.2 ஆனது 2016 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானத்துடன் தேசக் கட்டுமான வரி வருமான மதிப்பீட்டுடன் ஒப்பீடு செய்கின்றதுடன், 2017 ஆம் ஆண்டின் பின்னர் மாகாண சபைகளுக்கு மாற்றப்பட்ட வருமானத்தினையும் குறிப்பிடுகின்றது.

**அட்டவணை 2.11.2 – தேசக் கட்டுமான வரி சேகரிப்பும் மதிப்பீடும்**

| ஆண்டு | வருமான மதிப்பீடு (ரூபா) | வருமான சேகரிப்பு (ரூபா) | % |
|---|---|---|---|
| 2017 | 75,000,000,000 | 69,035,198,554 | 92% |
| 2016 | 54,000,000,000 | 57,424,138,359 | 106% |




### 2.11.1 தேசக் கட்டுமான வரியுடன் தொடர்புடைய பிரதான கொள்கை மாற்றங்கள்

பின்வருவனவற்றிற்கான விலக்களிப்புக்கள் நீக்கப்பட்டு அவை 2017, ஆகஸ்ட் 01 இலிருந்து பயனுறுதியாகும் வகையில் வரி விதிப்பனவுக்குட்படுகின்றன.

- சிறிலங்கன் எயார்லைன்ஸ் லிமிட்டட், மிஹின் லங்கா லிமிட்டட் அல்லது எயார்லங்கா கேற்றறிங் சேவைகள் லிமிட்டட் என்பவற்றிற்கு ஒப்படைப் பொருட்களுக்கான சர்வதேசப் போக்குவரத்து சேவைகளினை வழங்கும் நோக்கத்திற்காக தேவைப்படும் ஏதேனும் பொருட்களின் வழங்கல்;

- உப ஒப்பந்ததாரர் தவிர்ந்த ஒப்பந்ததாரர் ஒருவரினால் நிருமாண சேவைகளுக்காக, ஏதேனும் கூட்டுறவுச் சங்கம் அல்லது லக் சதொசவினால் அளிக்கப்பட்ட ஏதேனும் பொருட்கள் அல்லது சேவைகளின் வழங்கல்;

- பயண இலக்கற்ற சுற்றுலாக்கள் தொடர்பில் பயண முகவர் ஒருவரின் சேவைகள் (வங்கியொன்றினூடாக வெளிநாட்டு நாணயத்தில் பெறப்படுகின்ற ஏனைய சேவைகனளுக்கான கொடுப்பனவு); - வதிவிட அடுக்குமாடிக் குடியிருப்புக்களின் வழங்கல்

ii. பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகள், 2017, ஆகஸ்ட் 1 இலிருந்து பயனுறதியாகும் வகையில், வரி விலக்களிப்புக்குட்படுகின்றன:

- வெளியக தொழிற்படுத்துனர்களினால் உள்ளக தொழிற்படுத்துனர்களுக்கான சர்வதேச தொலைத்தொடர்பு சேவைகளின் வழங்கல்;

- அச்சடிக்கப்பட்ட புத்தகங்கள், சஞ்சிகைகள், நாளேடுகள், அல்லது புதினப் பதிரிகைகள் தவிர்ந்த ஏனைய பருவகால வெளியீடுகள்

iii. 2017,ஏப்பிரல் 01 இலிருந்து பின்வரும் சேவைகள் வரி விலக்களிப்புக்குட்படுகின்றன –


இலங்கை மின்சார சபையினால் வழங்கப்படும், மின்சாரம் வழங்கல் தவிர்ந்த ஏனைய மின் வழங்கல் நடவடிக்கைகள்.

### 2.12 பொருளாதார சேவைக் கட்டண சேகரிப்பு

குறித்த ஆண்டு காலப்பகுதியில் சேகரிக்கப்பட்ட பொருளாதார சேவைக் கட்டணத்தின் திரட்டிய தொகையாக ரூபா 44,719 மில்லியன் சேகரிக்கப்பட்டதுடன், மொத்த வருமான சேகரிப்பில் அதன் பங்களிப்பு 5.35% ஆக இருந்துள்ளது. இது குறித்த ஆண்டுக்கான மதிப்பீட்டின் 93% ஆகும்.

அட்டவணை 2.12 – பொருளாதார சேவைக் கட்டண சேகரிப்பு

| ஆண்டு | வருமான மதிப்பீடு (ரூபா) | வருமான சேகரிப்பு (ரூபா) | % |
|---|---|---|---|
| 2017 | 48,000,000,000 | 44,719.757,960 | 93% |
| 2016 | 21,000,000,000 | 20,458,175,363 | 97% |




### 2.12.1. பொருளாதார சேவைக் கட்டணத்துடன் தொடர்புடைய பிரதான கொள்கை மாற்றங்கள்

பொருளாதார சேவைக் கட்டணத்துடன் தொடர்புடைய பின்வரும் மாற்றங்கள் வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டன.

(i) 2017.04.01 இலிருந்து பயனுறுதியாகும் வகையில், தற்போதைய வரி எல்லைக் குறுமட்டமானது காலாண்டொன்றிற்கு ரூபா.50 மில்லியனிலிருந்து ரூபா.12.5 மில்லியனுக்கு குறைக்கப்பட்டுள்ளது.

(ii) 2017.04.01 இலிருந்து பயனுறுதியாகும் வகையில், மோட்டார் வாகனங்களின் ஒவ்வொரு இறக்குமதி ஒப்படை தொடர்பில், இறக்குமதியாளரின் (பொசேக பொறுப்புக்கான எல்லைக் குறுமட்டத்தினைக் கவனத்தில் கொள்ளாது) முற்பண பொருளாதார சேவைக் கட்டணமானது, சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் சான்றுப்படுத்திய கப்பல் தளப் பெறுமதி மீது முற்பணமாக அறவிடப்படுகின்றது. பொசேக முற்பணக் கொடுப்பனவானது அதே வரி மதிப்பாண்டுக்கான பொருளாதார சேவைக்கட்டணத்தின் உண்மைப் பொறுப்புக்கெதிராக பதவளிக்கப்பட முடியும்.

(iii) இலங்கை மத்திய வங்கி உள்ளடக்கும் "ஆள்" எனும் பதத்தின் மீள் வரைவிலக்கணமானது, 2017.04.01 இலிருந்து பயனுறுதியாகும் வகையில், பொசே இற்குப் பொறுப்புடையவரும் பொசேக நோக்கத்திற்கானவருமான ஆளொருவராக மீள் வரைவிலக்கணப்படுத்தப் படுகின்றது.

(iv)

## 2.13 உழைக்கும் பொழுது செலுத்தும் வரி சேகரிப்பு

உழைக்கும் போது செலுத்தும் வரி சேகரிப்பு திட்டத்தின் கீழ் குறித்த ஆண்டு காலப்பகுதியில் சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் ரூபா 32,920 மில்லியனாக இருந்துள்ளது.

## 2.14 நிறுத்தி வைத்தல் வரிகள் (வட்டி மற்றும் விதித்துரைக்கப்பட்ட கட்டணங்களின் மீது)


நிறுத்தி வைத்தல் வரியானது குறித்த ஆண்டு காலப்பகுதியில் ரூபா 51,350.859,423 தொகையுடைய வருமானத்தினை பதிவு செய்துள்ளது. முன்னைய ஆண்டு சேகரிப்புடன் ஒப்பிடுகையில் இந்த வருட வட்டி மீதான நிறுத்தி வைத்தல் வரி வருமானமானது ரூபா 3,511 மில்லியனினால் அதிகரித்துள்ளது.

## 2.15 பந்தய மற்றும் சூதாட்ட அறவீடு

குறித்த ஆண்டு காலப்பகுதியில் பந்தய மற்றும் சூதாட்ட அறவீடு தொடர்பான சேகரிப்பானது ரூபா 1,929/- மில்லியனாக இருந்துள்ளதுடன் இது முன்னைய ஆண்டுக்கென மதிப்பிடப்பட்ட தொகையுடன் ஒப்பிடுகையில் 2.31% இனால் வளர்ச்சியடைந்துள்ளமையினைக் காட்டுகின்றது. இது குறித்த ஆண்டுக்கென மதிப்பிடப்பட்ட தொகையுடன் ஒப்பிடுகையில் ரூபா 129 மில்லியன் அதிகரிப்பினைக் காட்டுகின்றது.

அட்டவணை 2.13 – பந்தய மற்றும் சூதாட்ட அறவீடு சேகரிப்பு

| ஆண்டு | வருமான மதிப்பீடு (ரூபா) | வருமான சேகரிப்பு (ரூபா) | % |
|---|---|---|---|
| 2017 | 1,800,000,000 | 1,929,034,608 | 107% |
| 2016 | 900,000,000 | 1,884,498,652 | 209% |




## 2.16 மோட்டார் வாகன உரித்துடமை விதிப்பனவு

வாகன உரித்துடமை வதிப்பனவானது 2015 ஆம் அண்டின் 10 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட மோட்டார் வாகன இறக்குமதி உரிமக் கட்டணத்திற்குப் பதிலாக 2016 ஜனவரி 1 இலிருந்து பயனுறுதியாகும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த விதிப்பனவானது, ஏதேனும் வங்கியில் சென்மதிக் கடிதமொன்றினைத் திறக்கும் நேரத்திலேயே மோட்டார் வாகன இறக்குமதியினை மேற்கொள்கின்ற ஒவ்வொரு இறக்குமதியாளரினாலும் செலுத்தப்படுதல் வேண்டும்.

குறித்த ஆண்டு காலப்பகுதியில், வாகன உரித்துடமை விதிப்பனவிலிருந்து சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 1,651 மில்லியனாக இருந்துள்ளதுடன் குறித்த ஆண்டுக்கான மதிப்பீட்டுடன் ஒப்பிடுகையில் ரூபா.151 மில்லியன் மிகையாகும்.

## 2.17 முத்திரைத் தீர்வை சேகரிப்பு

குறித்த ஆண்டு காலப்பகுதியில் முத்திரைத் தீர்வையிலிருந்து ரூபா 10,651 மில்லியன் வருமானமாகப் பெறப்பட்டது. 2011 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க மாகாண சபைகள் (முத்திரைத் தீர்வை மாற்றீடு)


சட்டத்தின் நியதிகளின்படி முத்திரைத் தீர்வை மொத்த சேகரிப்பானது உரிய மாகாண சபைகளுக்கு மாற்றப்பட்டது. திணைக்களமானது முத்திரைத் தீர்வை இணக்கப்பாட்டினை விரிவாக்கும் நோக்குடன் மதியுரை மற்றும் மேற்பார்வை விஜயங்களை நடாத்தியுள்ளது

## 2.18 2013 இலிருந்து 2017 வரையிலான உள்நாட்டு இறைவரி சேகரிப்பு (வரி ரீதியாக)

அட்டவணை 2.14 :- உள்நாட்டு இறைவரி சேகரிப்பு 2013 - 2017 – வரி அடிப்படை பகுப்பாய்வு

| வரி வகை | 2013 | | 2014 | | 2015 | | 2016 | | 2017 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | சேகரிப்பு (ரூ.மில்) | % | சேகரிப்பு (ரூ.மில்) | % | சேகரிப்பு (ரூ.மில்) | % | சேகரிப்பு (ரூ.மில்) | % | சேகரிப்பு (ரூ.மில்) | % |
| வருமான வரி | 199,070 | 40.42 | 191,960 | 37.33 | 256,435 | 47.56 | 238,399 | 37.16 | 229,842 | 27.46 |
| பொருளாதார சேவைக் கட்டணம் | 6,596 | 1.34 | 6,155 | 1.2 | 6,148 | 1.1 | 20,458 | 3.19 | 44,720 | 5.34 |
| பெறுமதிசேர் வரி | 217,687 | 44.2 | 237,915 | 46.27 | 214,237 | 38.23 | 283,451 | 44.18 | 443,739 | 53.05 |
| பந்தயம் மற்றும் சூதாட்ட அறவீடு | 592 | 0.12 | 815 | 0.16 | 832 | 0.15 | 1,884 | 0.29 | 1,929 | 0.24 |
| பங்கு கொடுக்கல் வாங்கல் அறவீடு | 1,197 | 0.24 | 2,048 | 0.4 | 1,395 | 0.25 | 738 | 0.12 | 1,334 | 0.16 |
| புரள்வு வரி | 218 | 0.04 | 472 | 0.09 | 16 | - | 17 | - | 20 | 0 |
| முத்திரைத் தீர்வை | 6,884 | 1.4 | 7,918 | 1.54 | 11,596 | 2.07 | 10,651 | 1.67 | 11,377 | 1.36 |
| பொருட்கள் சேவைகள் வரி | 16 | - | 3 | - | 0.88 | - | 1.59 | - | 0.11 | 0 |
| தேசிய பாதுகாப்பு அறவீடு | 2 | - | 14 | - | 12 | - | 8 | - | 16 | 0 |
| நிர்மாணக் கைத்தொழில் உத்தரவாத அறவீடு | 751 | 0.15 | 842 | 0.16 | 753 | 0.13 | 259 | 0.04 | 53 | 0.01 |
| தேகவ | 59,397 | 12.06 | 65,354 | 12.71 | 67,911 | 12.12 | 84,066 | 13.1 | 101,825 | 12.17 |
| காணி வரி | 97 | 0.02 | 579 | 0.11 | 1,066 | 0.19 | 23 | - | 7 | 0 |
| வாகன உரித்துடமை விதிப்பனவு | - | - | - | - | - | - | 1,579 | 0.25 | 1,651 | 0.19 |
| குடியகல்வு வரி | - | - | - | - | - | - | 11 | - | 4 | 0 |
| சமூகப் பொறுப்பு வரி | 32 | 0.01 | 85 | 0.02 | 20 | - | 1 | - | - | - |
| மொத்த சேகரிப்பு | **492,539** | **100** | **514,160** | **100** | **560,422** | **100** | **641,546** | **100** | **836,517** | **100** |

IRD SL


வரைபு 10
உள்நாட்டு இறைவரி சேகரிப்பு 2013 - 2017 – வரி அடிப்படை பகுப்பாய்வு
வருமானம் பில்லியன்கள்
450
420
390
360
330
300
270
240
210
180
150
120
90
60
30
0
2013
2014
2015
2016
2017
ஆண்டு
வருமான வரி
பொருளாதார சேவைக் கட்டணம்
பெறுமதிசேர் வரி
தேசக் கட்டுமான வரி
முத்திரைத் தீர்வை

IRDSL

# அத்தியாயம் 3

# செலவினம் மற்றும் உற்பத்தி வினைத்திறன் விகிதாசாரம்

IRDSL

IRDSL

குறித்த ஆண்டு காலப்பகுதியில் திணைக்களத்தின் மொத்த செலவினமானது ரூபா 4,337 மில்லியனாக இருந்துள்ளதுடன், இது முன்னைய ஆண்டுத் தொகையான ரூபா 4,061மில்லியனுடன் ஒப்பிடுகையில், 6.79% வீழ்ச்சியனைப் பதிவு செய்துள்ளது. மொத்த செலவினத்தில் 69.51% அல்லது ரூபா 3,014 மில்லியனானது மீண்டுவரும் செலவினத்திற்காக செலவிடப்பட்டது. 2016 இல் இச் செலவினமானது ரூபா 2,841 மில்லியனாக இருந்துள்ளது. வேதனாதிகள் மீதான செலவினமானது 5.97% இனால் அதிகரித்துள்ளதுடன், இது 2016 இல் ரூபா 1,984 மில்லியனாக இருந்துள்ளது. இது மொத்தச் செலவினத்தின் 48.49% இனையும் மீண்டுவரும் செலவினத்தில் 69.76% இனையும் கொண்டிருந்ததுடன், தனியொரு வகையீட்டுக்கான மிகப் பெரிய தொகையாகவும் அமைந்திருந்தது.


குறித்த ஆண்டு காலப்பகுதியில், மூலதனச் செலவினமானது ரூபா.1,322 மில்லியனாக இருந்துள்ளதுடன் 8.41% அதிகரிப்பினையும் பதிவு செய்துள்ளது. இது 2016 ஆம் ஆண்டில் ரூபா 1,220 மில்லியனை அடையப் பெற்றிருந்தது. திணைக்களத்தின் மொத்த செலவினத்தில் மூலதன செலவினமானது, 30.4% இனைப் பிரதிபலிக்கின்றது.


திணைக்களமானது திணைக்களத்தின் வினைத்திறனை மேம்படுத்தும் நோக்குடன் இறைவரி நிருவாக முகாமைத்துவ தகவல் முறைமையின் அமுலாக்கலுக்காக குறித்த ஆண்டு காலப்பகுதியில் ரூபா 1,068 மில்லியனை முதலீடு செய்யப்பட்டுள்ளது.

### 3.1 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் ஏற்பட்ட மொத்த செலவினத்தின் ஒப்பீடு

**அட்டவணை 3.1 :- மொத்த செலவினம் – 2015, 2016 மற்றும் 2017**

| விபரணம் | 2015 | | 2016 | | 2017 | |
|---|---|---|---|---|---|---|
| | (ரூ.'000) | % | (ரூ.'000) | % | (ரூ.'000) | % |
| <u>**மீண்டெழும் செலவினம்**</u> | | | | | | |
| வேதனாதிகள் | 1,783,351 | 40.19% | 1,984,484 | 48.87% | 2,103,065 | 48.49% |
| பிரயாணச் செலவுகள் | 22,337 | 0.50% | 33,172 | 0.82% | 122,367 | 2.82% |
| வழங்கல்கள் | 86,449 | 1.95% | 107,990 | 2.66% | 108,890 | 2.51% |
| பராமரிப்பு | 47,768 | 1.08% | 52,562 | 1.29% | 60,722 | 1.40% |
| ஒப்பந்த சேவைகள் | 453,239 | 10.21% | 624,199 | 15.37% | 579,474 | 13.36% |
| இடமாற்றல்கள் | 35,268 | 0.79% | 38,752 | 0.95% | 40,088 | 0.92% |
| **உப மொத்தம்** | **2,428,412** | **54.73%** | **2,841,159** | **69.96%** | **3,014,606** | **69.51%** |
| <u>**மூலதனச் செலவினம்**</u> | | | | | | |
| புனரமைப்பும் மேம்பாடும் | 73,624 | 1.66% | 29,425 | 0.72% | 61,083 | 1.41% |
| மூலதன ஆதனங்கள் சுவீகாரம் | 31,820 | 0.72% | 27,130 | 0.67% | 53,439 | 1.23% |
| திறன் கட்டியெழுப்புதல் | 385,170 | 8.68% | 55,031 | 1.36% | 127,817 | 2.95% |
| முதலீடு (RAMIS கருத்திட்டம்) | 1,518,108 | 34.21% | 1,108,385 | 27.29% | 1,067,931 | 24.62% |
| | - | - | - | - | 12,290 | 0.28% |
| **உப மொத்தம்** | **2,008,722** | **45.27** | **1,219,971** | **30.04%** | **1,322,560** | **30.49%** |
| **மொத்தம்** | **4,437,134** | **100.00%** | **4,061,130** | **100.00%** | **4,337,166** | **100.00%** |




## 3.2 உற்பத்தி வினைத்திறன் விகிதாசாரம்

2017 இல் திணைக்களத்தின் மொத்த செலவினமானது, ரூபா 4,337.16 மில்லியனாக இருந்துள்ளதுடன், சேகரிக்கப்பட்ட வருமானமானது ரூபா 836,517.69 மில்லியனாக இருந்துள்ளது. ஆகையால், உற்பத்தி வினைத்திறன் விகிதாசாரமானது (அதாவது செலவினத்தின் ஒவ்வொரு ரூபாவுக்கும் சேகரிக்கப்பட்ட வருமானம்) 193:1 ஆகும். வேறு முறையில் கூறுவதாயின், ரூபா 100/- இற்கான சேகரிப்பு செலவானது 52 சதமாக இருந்துள்ளது. இறக்குமதிகள் மீதான பெறுமதி சேர் வரி மற்றும் தேசக் கட்டுமான வரி என்பன நீங்கலாக ரூபா 100/- இற்கான சேகரிப்பு செலவு 68 சதமாக இருந்துள்ளது. (முன்னைய ஆண்டில் இத்தொகைகள் முறையே 63 சதம் மற்றும் 84 சதமாக இருந்துள்ளது).

அட்டவணை 21 ஆனது 2015 இலிருந்து 2017 வரையிலான காலப்பகுதிக்குரிய வருமான சேகரிப்பு, மொத்த செலவினம் மற்றும் சேகரிப்புச் செலவு என்பவற்றின் வகையீட்டினை வழங்குகின்றது.

**அட்டவணை 3.2 - வருமான சேகரிப்பு,மொத்த செலவினம் மற்றும் சேகரிப்பு செலவு (ரூபா.மில்)**

| விபரணம் | 2015 | 2016 | 2017 |
|---|---|---|---|
| **வருமான சேகரிப்பு** | | | |
| வருமான வரி | 256,434.94 | 238,398.61 | 229,841.81 |
| பொருளாதார சேவைக் கட்டணம் | 6,148.45 | 20,458.17 | 44,719.76 |
| பெறுமதிசேர் வரி | 214,236.99 | 283,451.51 | 443,739.47 |
| தேசக் கட்டுமான வரி | 67,911.06 | 84,066.53 | 101,824.56 |

| | | | |
|---|---|---|---|
| பற்று வரி | 831.92 | 1,884.50 | 1,929.03 |
| பந்தய மற்றும் சூதாட்ட வரி | 1,394.92 | 737.66 | 1,333.90 |
| பங்கு கொடுக்கல்வாங்கல் வரி | 15.77 | 16.64 | 20.75 |
| புரள்வு வரி | 11,595.88 | 10,650.97 | 11,377.13 |
| முத்திரைத் தீர்வை | 0.89 | 1.59 | 0.12 |
| பொருட்கள் மற்றும் சேவைகள் வரி | 11.63 | 8.09 | 15.95 |
| தேசிய பாதுகாப்பு அறவீடு | 753.31 | 258.80 | 52.77 |
| நிர்மாண கைத்தொழில் உத்தரவாத நிதிய அறவீடு | 1,066.64 | 22.66 | 7.38 |
| காணி வரி | - | 1,579.13 | 1,650.96 |
| சமூகப் பொறுப்புடமை அறவீடு | - | 11.05 | 4.10 |
| **மொத்த சேகரிப்பு** | 19.96 | 0.84 | - |
| **வருமான சேகரிப்பு** | **560,422.36** | **641,546.75** | **836,517.69** |
| **செலவினம்** | | | |
| **மீண்டுவரும் செலவினம்** | | | |
| வேதனாதிகள் | 1,783.35 | 1,984.48 | 2,103.06 |
| பிரயாணச் செலவுகள் | 22.34 | 33.17 | 122.37 |
| வழங்கல்களும் உபகரணங்களும் | 86.45 | 107.99 | 108.89 |
| பராமரிப்பும் திருத்தங்களும் | 47.77 | 52.56 | 60.72 |
| சேவைகள் | 453.24 | 624.20 | 579.47 |
| இடமாற்றல்கள் | 35.27 | 38.75 | 40.09 |
| **மூலதன செலவினம்** | | | |
| புனரமைப்பும் மேம்பாடும் | 73.62 | 29.42 | 61.08 |
| கொள்ளல்கள் | 31.82 | 27.13 | 53.44 |
| திறன் கட்டியெழுப்புதல் | 385.17 | 55.03 | 127.82 |
| முதலீடு (RAMIS கருத்திட்டம்) | 1,518.11 | 1,108.39 | 1,067.93 |
| | - | - | 12.29 |
| **மொத்த செலவினம்** | **4,437.14** | **4,061.12** | **4,337.16** |
| | | | |
| **100/- இற்கான சேகரிப்பு செலவு** | **0.79** | **0.63** | **0.52** |
| **பெசேவ மற்றும் தேகவ நீங்கலாக 100/- இற்கான சேகரிப்பு செலவு** | **0.98** | **0.84** | **0.68** |

## 3.3 உள்ளக கணக்காய்வு

அனைத்து கொடுப்பனவுகள், நாளாந்த வாகனம் பயணிக்கும் தூர அட்டவணைகள் (தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகங்களினால் பேணப்படுபவை), கொடுப்பனவு தாள்கள், மதிப்பாய்வு சபையின் வருடாந்த அறிக்கைகள், இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் மத்திய வங்கிகளின் வங்கி கணக்கிணக்கம் போன்றவற்றினை ஆய்வு செய்தல் உள்ளடங்கலான கணக்காய்வுகள் உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கும் மேலாக, மதிப்பிழந்த காசோலைகள் மீதான வரவேண்டிய தொகையினை அறவீடு செய்வதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கை குறித்து ஆய்வினை மேற்கொள்ளல், வருமான வரி மற்றும் பெறுமதி சேர் வரி தொடர்பான மீள் நிதியிடல்கள், கட்டுநிதி கணக்கு மற்றும் கட்டுநிதி காசுக் கணக்கினை செவ்வை பார்த்தல் என்பன உள்ளக கணக்காய்வு கிளையினால் நிறைவேற்றப்படும் ஏனைய பிரதான பணிகளாகும்.

IRDSL

# அத்தியாயம் 4

# தவறகையில் உள்ள வரிகள்

IRDSL

IRDSL

## 4.1 தவறுகையில் உள்ள வரிகள்

அட்டவணை 22 ஆனது 2017.12.31 இலுள்ளவாறான தவறகையிலுள்ள வரி தொகைகள், தண்டப் பணங்கள் மற்றும் சேகரிக்கத்தக்க தொகை என்பவற்றினைக் காட்டுகின்றது.

**அட்டவணை 4.1 - 2017.12.31 இலுள்ளவாறான நிலுவையிலுள்ள வரிகளின் பகுப்பாய்வு**

| வரி வகை | தவறவிடப்பட்ட மொத்த வரித் தொகை ரூபா | தண்டப்பணம் ரூபா | தண்டப்பணம் நீங்கலான பிணக்கு வரி (ரூபா) | பிணக்கு வரிகளுடன் தொடர்புடைய தண்டப்பணம் | சேகரிக்கத்தக்க வரி (ரூபா) | சேகரிக்கத்-தக்க தண்டப்பணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|---|
| வருமான வரி | 117,663,779,978 | 69,900,855,557 | 112,000,816,315 | 66,915,465,836 | 5,662,963,663 | 2,985,389,721 |
| வருமான வரி மீதான மிகைக் கட்டணம் | 258,960,780 | 165,710,940 | 255,044,714 | 163,763,121 | 3,916,066 | 1,947,819 |
| வருமான வரி (வட்டி மீதான நிறுத்தி வைத்தல் வரி வட்டி) | 1,508,265,061 | 688,812,235 | 214,441,597 | 91,808,201 | 1,293,823,464 | 597,004,034 |
| பெறுமதி சேர் வரி | 50,350,479,988 | 38,913,961,644 | 42,597,804,741 | 32,783,899,407 | 7,752,675,247 | 6,130,062,237 |
| பெறுமதி சேர் வரி (நிதிச் சேவைகள்) | 7,643,997,409 | 4,153,954,002 | 7,609,732,579 | 4,118,186,802 | 34,264,830 | 35,767,200 |
| பொருளாதார சேவைக் கட்டணம் | 3,849,895,152 | 3,319,060,447 | 3,120,031,452 | 2,799,561,786 | 729,863,700 | 519,498,661 |
| தேசக் கட்டுமான வரி | 9,145,262,843 | 6,752,140,750 | 5,297,328,168 | 4,419,749,404 | 3,847,934,675 | 2,332,391,346 |
| முத்திரைத் தீர்வை | 391,312,502 | 190,590,856 | 383,119,329 | 186,520,478 | 8,193,173 | 4,070,378 |
| பற்று வரி | 9,732,724 | 4,866,362 | - | - | 9,732,724 | 4,866,362 |
| புரள்வு வரி | 2,215,581,368 | - | 2,215,581,368 | - | - | - |
| பொருட்கள் சேவைகள் வரி | 1,722,835,502 | 863,949,677 | 1,722,835,502 | 863,949,677 | - | - |
| தேசிய பாதுகாப்பு அறவீடு | 934,955,433 | 1,011,928,821 | 934,955,433 | 1,011,928,821 | - | - |
| தேச பாதுகாப்பு பங்களிப்பு | 1,267,057,545 | 529,265,383 | 1,267,057,545 | 529,265,383 | - | - |
| நலன் வரி | 14,286,141 | 4,471,485 | 14,286,141 | 4,471,485 | - | - |
| செல்வ வரி | 849,952 | 403,652 | 849,952 | 403,652 | - | - |
| நன்கொடை வரி | 2,409 | 1,204 | 2,409 | 1,204 | - | - |
| சமூக பொறுப்பு அறவீடு | 1,848,479 | 146,995 | 1,848,424 | 146,995 | 55 | - |
| திரண்ட தண்டப்பணம் | - | 252,837,716 | - | 137,202,448 | - | 115,635,268 |
| மொத்தம் | **196,979,103,266** | **126,752,957,726** | **177,635,735,669** | **114,026,324,700** | **19,343,367,597** | **12,726,633,026** |

குறிப்பு:

i. தவறகையிலுள்ள மொத்த வரிகள் உரிய வரிகளின் தற்போதைய திரண்ட மீதியினை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. எவ்வாறாயினும், மேலே வகுப்பாக்கம் செய்யப்பட்டவாறான தவறவிடப்பட்ட வரிகள் முழுமையான நிலுவையாக இருக்கமாட்டாது.

ii. ஏதாவதொரு காரணத்திற்காக மதிப்பீடொன்று வழங்கப்படுகையில், நிலுவைகள் அல்லது தவறுதல்கள் ஏற்படுகின்றன. (வரி செலுத்துனர்கள் விபரத்திரட்டுக்களை சமர்ப்பிக்காமை, விபரத்திரட்டுக்களின் அடிப்படையில் வரிகள் செலுத்தப்படாமை, பிழையான விபரத்திரட்டுக்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் போன்றன சமர்ப்பிக்கப்படுதல்). உரிய திகதியில் கொடுப்பனவு செய்யாமைக்காக பொதுவாக 10% தண்டப் பணமும், வருமான வரியினைப் பொறுத்தமட்டில் வரியின் 50% இனை அடையும் வரையில் கொடுப்பனவு செலுத்தாமைக்கு ஒவ்வொரு மாதமும் மேலும் 2% விதிக்கப்படுவதுடன், பெறுமதி சேர் வரியினைப் பொறுத்தவரையில் ஆகக் கூடுதலாக 100% விதிக்கப்படும்.

iii. சில வரி மதிப்பீடுகளுக்கெதிராக வரி செலுத்துனர்கள் மேன்முறையீடு மேற்கொள்ளப் படுவதனைத் தொடர்ந்து வரி செலுத்துனரின் மேன்முறையீட்டு உரிமைகள் என்ற வகையில் இணக்கப்பாடுகள், சில விடயங்களில் உயர்ந்த மேன்முறையீட்டு மட்டங்களில் (வரி மேன்முறையீட்டு ஆணையாளர், மேன்முறையீட்டு நீதிமன்றம் போன்றவை) எட்டப்படுமிடத்து, அது தவறவிடப்பட்ட வரியாகக் கருதப்படுதல் வேண்டும். அந்த தவறவிடப்பட்ட வரித் தொகையானது பிணக்கிலுள்ள வரித் தொகையாக அல்லது வரி மீதான தண்டப் பணமாக வகுப்பாக்கம் செய்யப்படும். மேன்முறையீட்டினை இணக்கப்பாடு செய்யும் போது தண்டப் பணத்துடன் சேர்க்கப்பட்ட வரி மதிப்பீட்டுத் தொகையின் ஏதேனும் அதிகரிப்பு விடுவிப்புச் செய்யப்படும்.

## 4.2 தவறகையிலுள்ள வரிகளைக் குறைப்பதற்கான திட்டங்கள்

அ. தவறகையிலுள்ள வரிகளை அறவீடு செய்வதற்காக உரிய சட்டவாக்கங்களில் குறித்துரைக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் படிமுறைகள் எடுக்கப்பட வேண்டியுள்ளன. அத்தகைய நடவடிக்கைகள், வரி மதிப்பீடுகளை வழங்குவதிலிருந்து தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட போதிலும் கணிசமானளவு தொகை தவறகையில் இருந்துள்ளமையினைக் காண முடிந்துள்ளது.

ஆ. தவறகையிலுள்ள வரி அறவீட்டுப் பிரிவானது, 2010 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க தவறகையிலுள்ள வரிகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தில் அளிக்கப்பட்டுள்ளவாறான தவறகையிலுள்ள வரிகள் தொடர்பான அறிக்கையினை தயாரித்துள்ளதுடன், (குறித்த சில சந்தர்ப்பங்களில், தவறகையிலுள்ள வரிகளை அறவீடு செய்வதற்கான விடயங்களை துரிதப்படுத்துவதற்கும் ஒழுங்கமைப்பதற்காகவும் அதனுடன் தொடர்புடைய விடயங்களை இனங்காண்பதற்காகவும் அளிக்கப்படும் ஒரு சட்டம்) அதிகாரமளிக்கப்பட்ட பயனுறுதிவாய்ந்த அறவீட்டு நடவடிக்கைகள் சிறந்த பெறுபேறுகளுக்கு வழி வகுக்கின்றன.

## 4.3 வரி நிலுவைகளை 3% இல் பேணுதல்

2010 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க தவறுகையிலுள்ள வரிகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 12 ஆம் பிரிவின் நியதிகளின்படி சேர்ந்த தண்டப் பணம் நீங்கலாக, ஏதேனும் வரிகளின் கூட்டுத்தொகையினை உறுதிப்படுத்துவது ஆணையாளர் நாயகத்தின் கடமையாக இருத்தல் வேண்டும் அல்லது வரியின் மிகை அல்லது தவறவிடப்பட்ட வரியின் ஏதேனும் பகுதி இச்சட்டத்தின்

அட்டவணையில் விதித்துரைக்கப்பட்ட ஏதேனும் சட்டவிதியின் கீழ் தவறவிடப்பட்ட வரியானது 2010 ஜனவரி 1 ஆம் திகதி ஆரம்பமாகும் அல்லது அதன் பின்னர் ஆரம்பமாகும் ஏதேனும் கலண்டர் வருடத்தின் இறுதியிலுள்ளவாறு குறித்த சட்டத்தின் கீழ் அறவிடப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட சட்டங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட மொத்த வரியில் மூன்று *சதவீதத்தினை* விஞ்சாதிருத்தல் வேண்டும். அதற்கமைவாக,

| | | |
|---|---|---|
| 2016.12.31 இலுள்ளவாறான தேறிய தவறவிடப்பட்ட வரி | - | ரூபா. 18,808,903,073 |
| <u>கழி</u> | | |
| 2015.12.31 இலுள்ளவாறான தேறிய தவறவிடப்பட்ட வரி | - | <u>ரூபா. 22,526,949,150</u> |
| 2016 இல் தவறவிடப்பட்ட வரியின் குறைவு | | |
| | - | ரூபா. 3,718,046,077 |
| 2016.12.31 இல் முடிவடைந்த ஆண்டில் மொத்த வரி சேகரிப்பு | - | ரூபா.524,834,223,679 |
| 2016 இல் மொத்த வரி சேகரிப்பின் 3% | - | ரூபா. 15,745,026,710 |

எனவே, 2010 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க தவறவிடப்பட்ட வரிகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறு, முன்னைய ஆண்டின் மொத்த வரி சேகரிப்பின் 3% இற்கு குறைவாக இருப்பதால், 2017 இல் தவறவிடப்பட்ட வரிகளில் தேறிய சேர்ப்பு எதுவும் இடம் பெறவில்லை.

IRDSL

# அத்தியாயம் 5

# கணக்காய்வுகள், மேலதிக வரி சேகரிப்பு, மீள் கொடுப்பனவுகள், அறவீட்டு நடவடிக்கைகள் மற்றும் மேன்முறையீடுகள்

IRDSL

IRDSL

## 5.1 கணக்காய்வுகள்

வியாபாரச் செயற்பாடுகள், உரிமையின் வகை மற்றும் வியாபாரத்தின் அளவு என்பவற்றின் நியதிகளின்படி வரி செலுத்துனர்களின் பரந்தளவிலான சாத்தியமான உள்ளடக்கத்திற்கு 2017 ஆண்டு காலப்பகுதியில் கணக்காய்வுகள் மற்றும் முதலீடுகள் என்பன பொறுப்பேற்கப்பட்டன. பாரியளவிலான வரி செலுத்துனர்கள் தொடர்பில் பங்கிலாபங்கள் செலுத்தப்பட்டுள்ள புலனாய்வு மூலவளங்களின் வினைத்திறன்வாய்ந்த பயன்பாடு கண்டறியப்பட்டுள்ளது. மீளாய்வு காலப்பகுதியில் இத்தகைய வகையீடு தொடர்பான தெரிவு செய்யும் நடைமுறை தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்பட்டமையினால், தீர்வையினை மீளளிப்பதில் கணிசமானளவு அதிகரிப்பு ஏற்பட்டது. அதற்கிணங்க, மேலதிக வரி சேகரிப்பில் திருப்திகரமான மட்டத்தினை அடைவதற்கான கணக்காய்வுத் தொழிற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன், அவை அட்டவணை இல.22 மற்றும் 23 இல் காட்டப்பட்டுள்ளன.

**அட்டவணை 5.1.1– குறித்த ஆண்டின் போது கணக்காய்வுகள் மற்றும் மேலதிக வரி சேகரிப்பு பற்றிய விபரங்கள் (ரூபா ‘000)**

| | வருமான வரி | பெசேவ | பொசேக | உபொசெவ | தேகவ | ஏனைய | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| குறித்த ஆண்டின் போது மதிப்பிடப்பட்ட மேலதிக வரியின் மொத்தத் தொகை | 4,372,703 | 434,383 | 25,069 | 8,255 | 158,583 | 4,998,993 | 4,372,703 |
| குறித்த ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட மேலதிக வரியின் மொத்தத் தொகை | 3,702,318 | 212,594 | 18,062 | 7,113 | 118,986 | 4,059,073 | 3,702,318 |
| 2016 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட கணக்காய்வுகளின் எண்ணிக்கை | **1244** | | | | | | |
| 2016 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட்ட கணக்காய்வுகளின் எண்ணிக்கை | **1221** | | | | | | |

**அட்டவணை 5.1.2– ஒருங்கிணைந்த மற்றும் ஏனைய அலகுகளினால் மேலதிக வரிகளின் பகுப்பாக்கம் (தண்டப்பணம் உள்ளடங்கலாக)**

| விபரம் | மேலதிக வருமானம்/புரள்வு மதிப்பீடும் உடன்பாடும் (ரூபா ‘000) | மேலதிக வரி மதிப்பீடும் உடன்பாடும் (ரூபா ‘000) | | | | சேகரிக்கப்-பட்ட மேலதிக வரி (ரூபா ‘000) (தீர்க்கப்பட்ட கோரிக்கை மீளளிப்பு உள்ளடங்கலாக) |
|---|---|---|---|---|---|---|
| | | ஒருங்கிணைந்த பாவபி | ஒருங்கிணைந்த பிற | பிற அலகுகள் | மொத்தம் | |
| வருமான வரி | 18,418,505 | 3,702,392 | 164,500 | 505,811 | 4,372,703 | 3,702,318 |
| பெ.சே.வரி | 3,342,898 | 199,488 | 164,727 | 70,168 | 434,383 | 212,594 |
| பொ.சே.க | 5,028,984 | 0 | 10,353 | 14,716 | 25,069 | 18,062 |
| உபொசெவ | 50,231 | 1,243 | 7,012 | 0 | 8,255 | 7,113 |
| தே.க.வரி | 11,541,003 | 25,673 | 58,881 | 74,029 | 158,583 | 118,986 |
| **மொத்தம்** | **38,381,621** | **3,928,796** | **405,473** | **664,724** | **4,998,993** | **4,059,073** |

### 5.2. மேன்முறையீடுகள்

குறித்த ஆண்டின் போது வழங்கப்பட்ட மதிப்பீடுகளுக்கு எதிராகப் பெறப்பட்ட மேன்முறையீடுகளில் 292 இனை பூர்த்தி செய்துள்ளதுடன், மேன்முறையீடுகளின் பகுப்பாய்வு நிலைமை பின்வருமாறு;

**அட்டவணை 5.2 – பெறப்பட்டதும் தீர்க்கப்பட்டதுமான மேன்முறையீடுகளின் பகுப்பாய்வு**

| | | வருமான வரி | பெசேவ | பொசேக | தேகவ | ஏனைய | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| **2017.01.01 அன்றுள்ளவாறு மீதி** | மேன்முறையீடு மற்றும் ஆட்சேபனை அலகு | 62 | 72 | 0 | 35 | 0 | 169 |
| | உ.இ.ஆ.நா. விசாரணைகள் | 82 | 100 | 0 | 81 | 2 | 265 |
| **குறித்த ஆண்டின் போது பதிவு செய்யப்பட்டது (மே.மு.2 இன்படி)** | | **322** | **271** | **16** | **171** | **16** | **796** |
| **நிறைவு செய்யப்பட்டவை** | தீர்க்கப்பட்டவை (உ.இ.ஆ.நா) | 36 | 60 | 0 | 60 | 1 | 157 |
| | மேன்முறையீடு மற்றும் ஆட்சேபனை அலகு | 39 | 74 | 1 | 21 | 0 | 135 |
| **உ.இ.ஆ.நா.விசாரணைக்காக சமர்ப்பிக்கப்பட்டவை** | | **46** | **91** | **0** | **63** | **1** | **201** |
| **2017.12.31 அன்றுள்ளவாறு மீதி** | மேன்முறையீடு மற்றும் ஆட்சேபனை அலகு | 300 | 166 | 15 | 135 | 5 | 621 |
| | உ.இ.ஆ.நா. விசாரணைகள் | 78 | 118 | 0 | 70 | 1 | 267 |

### 5.3 அறவீட்டு நடவடிக்கைகள்

பின்வரும் அட்டவணையானது குறித்த ஆண்டு காலப்பகுதியில் வரிகளை அறவிடுவதற்காக தொடரப்பட்ட வழக்குகள் மற்றும் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் எண்ணிக்கையைக் காட்டுகின்றது.

**அட்டவணை 5.3 – அறவீட்டு நடவடிக்கைகள்**

| | **வழக்குகள்** | **அறிவித்தல்கள்** |
|---|---|---|
| பறிமுதல் தொடர்பான அறிவித்தல்கள் வழங்குதல் | 228 | 263 |
| வழக்கீட்டு நடவடிக்கை | 400 | 247 |
| பிற நடவடிக்கை | 2,131 | 1,956 |

### 5.4 மீள் கொடுப்பனவுகள்

குறித்த ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட மீள் கொடுப்பனவுகளின் பகுப்பாய்வு (செலுத்த வேண்டியுள்ள வரிகளுக்கெதிராக கொடுப்பனவு செய்யப்பட்ட மீள் கொடுப்பனவுகள் நீங்கலாக) பின்வருமாறு:

| அட்டவணை 5.4 – மீள் கொடுப்பனவு பகுப்பாய்வு | | | | |
|---|---|---|---|---|
| வரி வகை | 2016 | | 2017 | |
| | மீள் கொடுப்பனவு தொகை ரூபா. | ஒவ்வொரு வரி வருமான சேகரிப்பின் தேறிய % | மீள் கொடுப்பனவு தொகை ரூபா. | ஒவ்வொரு வரி வருமான சேகரிப்பின் தேறிய % |
| பெறுமதி சேர் வரி | 505,773,176 | 0.18% | 678,892,311 | 0.15% |
| கூட்டிணைவு வருமான வரி | 28,077,492 | 0.02% | 15,918,082 | 0.01% |
| பிற நிறுவனமல்லா வருமான வரி | 7,061,585 | 0.07% | 3,928,822 | 0.04% |
| குறிப்பீடு செய்யப்பட்ட கட்டண மீதான நிறுத்திவைத்தல் வரி | 921,091 | 0.01% | | 0.00% |
| உ.பொ.செ.வரி | 28,634,229 | 0.10% | 24,786,377 | 0.08% |
| **மொத்தம்** | **570,467,573** | **0.09%** | **723,525,592** | **0.09%** |

IRDSL

# அத்தியாயம் 6

# சர்வதேச உறவுகள்

IRDSL

IRDSL

## 6.1 இரட்டை வரி விதிப்பினைத் தவிர்க்கும் ஒப்பந்தங்கள்

நாடுகள் சர்வதேச வர்த்தகத்தில் (அல்லது கொடுக்கல் வாங்கல்களில்) சட்டரீதியான இரட்டை வரி விதிப்பு மற்றும் அரசிறை வரி தட்டிக் கழிப்பினை இல்லாமல் செய்வதற்கு அல்லது அவற்றினைக் குறைப்பதற்காக இரட்டை வரி விதிப்பு ஒப்பந்தங்களை மேற்கொண்டு வருகின்றன. இத்தகைய ஒப்பந்தங்கள் குறிப்பாக அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் வெளிநாட்டு முதலீடுகள், நிபுணத்துவம், நவீன தொழில்நுட்பம் மற்றும் வேலைவாய்ப்புக்கள் போன்றவற்றினைக் கவரும் பொருட்டு அவை கடன் முகவராண்மையின் மூலம் பாரிய பங்களிப்புக்களை வழங்கி வருவதால் முக்கியத்துவம் பெறுகின்றன.

அத்துடன் ஒப்புரவினைப் பெற்றுக் கொள்ளும் வகையில் இரட்டை வரி ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், இது போன்ற நாடுகளுக்கிடையிலான ஒத்துழைப்பு இலங்கையின் பல்வேறு ஒப்பந்த பங்காளர்களுடன் ஏற்படுத்தப்பட்டது.

இலங்கையானது 2017.12.31 இலுள்ளவாறு 44 நாடுகளுடன் இரட்டை வரி விதிப்பினைத் தவிர்க்கும் ஒப்பந்தங்களையும் அட்டவணை 28 இல் விதித்துரைக்கப்பட்டவாறான பல்தரப்பு ஒப்பந்தங்களையும் (சார்க்) மேற்கொண்டுள்ளது.

**அட்டவணை 6.1 - 2017.12.31 இல் வலுவிலுள்ளவாறு இரட்டை வரி விதிப்பு ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ள நாடுகள்**

| | நாடு | உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட திகதி | வர்த்தமானி | | வரி மதிப்பீட்டாண்டிலிருந்து இலங்கையில் தொழிற்பாடு |
|---|---|---|---|---|---|
| | | | இலக்கம் | திகதி | |
| 1 | அவுஸ்திரேலியா | 18-12-1989 | 657/2 | 08-04-1991 | 1992/93 |
| 2 | பங்களாதேஸ் | 24-07-8196 | 448/13 | 07-04-1987 | 1989/90 |
| 3 | பஹ்ரின் | 24-06-2011 | 1847/51 | 31-01-2014 | 2015/16 |
| 4 | பெல்ஜியம் | 03-02-1983 | 292/6 | 09-04-1984 | 1984/85 |
| 5 | கனடா | 23-06-1982 | 253/8 | 13-07-1983 | 1986/87 |
| 6 | சீனா | 11-08-2003 | 1374/20 | 6-01-2005 | 2006/07 |
| 7 | செக்கோசிலோவாக்கியா (செக் குடியரசு) | 23-02-1979 | 24/19 | 23-02-1979 | 1979/80 |
| 8 | டென்மார்க் (Rev.) | 22-12-1981 | 228/15 | 20-01-1983 | 1980/81 |
| 9 | பிரான்ஸ் | 17-09-1981 | 210/17 | 17-09-1982 | 1982/83 |
| 10 | பின்லாந்து | 18-05-1982 | 253/8 | 13-07-1983 | 1981/82 |
| 11 | ஜேர்மனி | 13-09-1979 | 113 | 31-10-1980 | 1982/83 |
| 12 | ஹொங்கொங் (வரையறு..) | 26-03-2004 | 1374/21 | 06-01-2005 | 2005/06 |
| 13 | இந்தியா (Rev.) | 22-01-2013 | 1828/9 | 17-09-2013 | 2014/15 |
| 14 | இந்தோனேசியா | 03-02-1993 | 789/10 | 21-10-1993 | 1995/96 |
| 15 | ஈரான் | 25-07-2000 | 1187/16 | 06-06-2001 | 2002/03 |
| 16 | இத்தாலி | 28-03-1984 | 322/4 | 05-11-1984 | 1978/79 |
| 17 | ஜப்பான் | 12-12-1967 | 14803/5 | 29-05-1968 | 1969/70 |
| 18 | கொரியா | 28-05-1984 | 342/11 | 29-03-1985 | 1980/81 |
| 19 | குவைற் | 05-02-2002 | 1245/19 | 18-07-2002 | 2002/03 |
| 20 | மலேசியா (Rev.) | 16-09-1997 | 1028/21 | 22-05-1998 | 99/2000 |
| 21 | மொறீசியஸ் | 12-03-1996 | 958/10 | 15-01-1997 | 1998/99 |
| 22 | நேபாளம் | 06-07-1999 | 1116/6 | 26-01-2000 | 2001/02 |
| 23 | நெதர்லாந்து | 17-11-1982 | 281/13 | 26-01-1984 | 1979/80 |
| 24 | நோர்வே(Rev.) | 01-12-1986 | 464/4 | 27-07-1987 | 1989/90 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 25 | ஓமான் (வரையறுக்கப்பட்ட) | 26-07-1994 | 881/7 | 26-07-1995 | 1979/80 |
| 26 | பாகிஸ்தான் | 15-10-1981 | 210/17 | 17-09-1982 | 1983/84 |
| 27 | பிலிப்பைன்ஸ் | 11-10-2000 | 1237/7 | 21-05-2002 | 2010/11 |
| | | | 1256/27 | 02-10-2002 | |
| 28 | போலந்து | 25-04-1980 | 130 | 27-02-1981 | 1984/85 |
| 29 | கட்டார் | 07-11-2004 | 1422/10 | 05-12-2005 | 2008/09 |
| 30 | ரூமேனியா | 19-10-1984 | 371/9 | 15-10-1985 | 1986/87 |
| 31 | ரஷ்யா | 02-03-1999 | 1101/22 | 15-10-1999 | 2003/04 |
| 32 | சவூதி அரேபியா (வரையறு) | 16-12-1999 | 1101/23 | 15-10-1999 | 1983/84 |
| 33 | சிங்கப்பூர் | 29-05-1979 | 57/11 | 10-10-1979 | 1977/78 |
| 34 | சுவீடன் | 23-02-1983 | 297/28 | 18-05-1984 | 1985/86 |
| 35 | சுவிற்சலாந்து | 11-01-1983 | 292/6 | 09-04-1984 | 1981/82 |
| 36 | தாய்லாந்து | 14-12-1988 | 571/16 | 18-08-1989 | 1990/91 |
| | ஐ.அ.எ. (வரை.) | 07-07-1992 | 824/13 | 23-06-1994 | 1979/80 |
| 37 | ஐ.அ.எ. (விரிவான) | 24-09-2003 | 1346/1 | 21-06-2004 | 2004/05 |
| 38 | ஐக்கிய இராச்சியம் | 21-06-1979 | 60/23 | 02-11-1979 | 1977/78 |
| | ஐக்கிய அமெரிக்கா | 20-09-2002 | 1298/8 | 21-07-2003 | 2004/05 |
| 39 | ஐக்கிய அமெரிக்கா | 14-03-1985 | 398/4 | 22-04-1986 | |
| 40 | வியட்னாம் | 26-10-2005 | 1455/9 | 24-07-2006 | 2007/08 |
| 41 | சீசெல்ஸ் | 23-09-2011 | 1837/14 | 20-11-2013 | 2015/16 |
| 42 | பெலாருஸ் | 26-08-2013 | 1837/13 | 20-11-2013 | 2015/16 |
| 43 | பெலஸ்தீன் | 16-04-2012 | 1838/8 | 26-11-2013 | 2015/16 |
| 44 | லக்ஸம்பேர்க் | 31-01-2013 | 1838/9 | 26-11-2013 | 2015/16 |
| **பல்தேசிய ஒப்பந்தங்கள்** | | | | | |
| 1 | சார்க் பல்தரப்பு ஒப்பந்தம் | 13-10-2005 | 1447/3 | 29-05-2006 | 2011/2012 |

### 6.1.1 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இரட்டை வரி விதிப்பு ஒப்பந்தங்கள் தொடர்பிலான விடயங்கள்

**<u>மீளாய்வு செய்யப்பட்டசெக் குடியரசுடனான உடன்படிக்கை</u>**

செக் குடியரசுடனான உடன்படிக்கையினை மீளாய்வு செயவது தொடர்பான முதலாவது சுற்றுப் பேச்சுவார்த்தைகள் 2017 ஏப்பிரல் 25 – 28 வரையில் செக் குடியரசின் பிரகுவே நகரில் நடாத்தப்பட்டன.

**<u>மீளாய்வு செய்யப்பட்ட சுவிற்சலாந்துடனான உடன்படிக்கை</u>**

இலங்கைக்கும் சுவிற்சலாந்து அரசாங்கத்திற்குமிடையிலான இரட்டை வரி விதிப்பனவினை தவிர்ப்பதற்கான உடன்படிக்கையின் மீளாய்வுக்கான இரண்டாம் சுற்றுப் பேச்சுவார்த்தை 2017 ஒக்டோபர் 24 -27 வரையில் இலங்கை, கொழும்பில் நடாத்தப்பட்டது.

அத்துடன், பல்வேறு புதிய ஒப்பந்தங்கள் மற்றும் தற்போதிருக்கும் ஒப்பந்தங்கள் குறித்த வேலைகளும் குறித்த ஆண்டு காலாப்பகுதியில் இடம்பெற்றன. பல தசாப்தங்களுக்கு முன்னதாக செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களை மீளாய்வு செய்யும் நடவடிக்கையானது அடிப்படையினை மாற்றியமைத்தல் மற்றும் இலாப மாற்றல் (BEPS) கருத்திட்டத்தின் கீழான தேவைப்பாடுகளுக்கிணங்கிய வகையில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டன. எதிர்காலத்தில் பல் தரப்பு விவகாரங்கள் (MLI) உள்ளடங்கலான அதன் நடவடிக்கைகள், உண்மையான

பொருளாதார அடிப்படைக் கூறிலிருந்து வரி அடிப்படையானது மாற்றியமைக்கப்பட்டமையால் வரி வருமானத்தினைத் தடுப்பதன் மூலம் பாதிப்புக்குள்ளாகும் நாடுகளிலிருந்து இலங்கை ஒன்றும் விதிவிலக்கானதல்ல.

## 6.2 வெளிநாடுகளில் நடாத்தப்பட்ட சர்வதேச வரி விதிப்பு தொடர்பான விடயங்களில் பங்குபற்றுதல்கள்

**அட்டவணை 6.2 - வெளிநாடுகளில் நடாத்தப்பட்ட சர்வதேச வரி விதிப்பு தொடர்பான விடயங்களில் பங்குபற்றுதல்கள்**

| இல. | அலுவலரின் பெயரும் பதவிப் பெயரும | நிகழ்ச்சித்திட்டம் | நாடு | காலப்பகுதி |
|---|---|---|---|---|
| 1 | திருமதி.கே.தஹநாயக்க<br>ஆணையாளர் நாயகம் | வருடாந்த முகாமைத்துவக் குழுக் கூட்டம் | இலண்டன் | 18.04.2017-<br>22.04.2017 |
| 2 | திருமதி.கே.தஹநாயக்க<br>ஆணையாளர் நாயகம் | இலங்கை மற்றும் செக் குடியரசுக்கிடையிலான இரட்டை வரி விதிப்பினைத் தவிர்ப்பதற்கான உடன்படிக்கை மீதான பேச்சுவார்த்தைகள் | பிராகுவே | 24.04.2017-<br>01.05.2017 |
| 3 | திருமதி.பீ.ரோஹிணி<br>பிரதி ஆணையாளர் நாயகம் | OECD மாநாடு - 2017 | பரிஸ் | 04.06.2017-<br>10.06.2017 |
| 4 | திருமதி.ஆர்.எம்.பீ.எஸ்.கே.ராஜபக்ஸ<br>பிரதி ஆணையாளர் நாயகம் | OECD மாநாடு - 2017 | பரிஸ் | 04.06.2017-<br>10.06.2017 |
| 5 | திரு.ஏ.ஏ.டி.யூ.அபேசிங்க<br>பிரதி ஆணையாளர் நாயகம் | 38ஆவது CATA வருடாந்த தொழில்நுட்ப மாநாடு | கானா | 05.11.2017-<br>12.11.2017 |
| 6 | திருமதி.சீ.எச் வீரசிங்க<br>பிரதி ஆணையாளர் நாயகம் | BEPS மீதான சட்டநடவடிக்கைகள் உள்ளடங்கலான 2 ஆவது கூட்டம் | பரிஸ் | 24.01.2017-<br>28.01.2017 |
| 7 | செல்வி.எச்.எம்.டி.முனசிங்க<br>பிரதி ஆணையாளர் நாயகம் | வரி மற்றும் குற்றச் செயல்கள் மீதான ஐந்தாவது OECD மாநாடு மற்றும் வரி கற்றச்செயல்களை புலனாய்வு செய்யும் தலைவர்களின் நான்காவது மாநாடு | ஐக்கிய இராச்சியம் | 05.11.2017-<br>11.11.2017 |
| 8 | திரு.டீ.ஆர்.எஸ்.ஹப்புஆராச்சி<br>சிரேஷ்ட ஆணையாளர் | இலங்கை மற்றும் செக் குடியரசுக்கிடையிலான இரட்டை வரி விதிப்பினைத் தவிர்ப்பதற்கான உடன்படிக்கை மீதான பேச்சுவார்த்தைகள் | பிராகுவே | 24.04.2017-<br>01.05.2017 |
| 9 | திரு.டப்எம்.பீ.ஜீ.என்.பி.வணிகசேகர<br>சிரேஷ்ட ஆணையாளர் | 38ஆவது CATA வருடாந்த தொழில்நுட்ப மாநாடு | கானா | 05.11.2017-<br>12.11.2017 |
| 10 | திரு.எம்.எல்.எம் தாஹிர்<br>சிரேஷ்ட ஆணையாளர் | சர்வதேச நாணய சங்கத்தின் 71 ஆவது மாநாடு | பிறேசில | 26.08.2017-<br>03.09.2017 |
| 11 | திரு.கே.டி.எம்.ரத்னகுமார<br>சிரேஷ்ட ஆணையாளர் | பெசேவ உலகளாவிய மாநாடு | பிரான்ஸ் | 10.04.2017-<br>16.04.2017 |
| 12 | திரு.ஜீ.சி.மஹநாம<br>சிரேஷ்ட ஆணையாளர் | பெசேவ உலகளாவிய மாநாடு | பிரான்ஸ் | 10.04.2017-<br>16.04.2017 |
| 13 | திரு.எஸ்.எஸ்.டி.வீரசேகர<br>சிரேஷ்ட ஆணையாளர் | பெசேவ உலகளாவிய மாநாடு | பிரான்ஸ் | 10.04.2017-<br>16.04.2017 |
| 14 | திரு.எம்.எஸ்.எம்.சியான்<br>சிரேஷ்ட ஆணையாளர் | BEPS மீதான சட்டநடவடிக்கைகள் உள்ளடங்கலான 2 ஆவது கூட்டம் | பிரான்ஸ் | 24.01.2017- |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | 28.01.2017 |
| 15 | திரு.எம்.டி.ஜே.எம்.தேவப்பிரிய<br>சிரேஷ்ட ஆணையாளர் | 38ஆவது CATA வருடாந்த தொழில்நுட்ப மாநாடு | கானா | 05.11.2017-<br>12.11.2017 |
| 16 | செல்வி.ஆர்.பி.எச்.பெர்ணாண்டோ<br>ஆணையாளர் | இலங்கை மற்றும் செக் குடியரசுக்கிடையிலான இரட்டை வரி விதிப்பினைத் தவிர்ப்பதற்கான உடன்படிக்கை மீதான பேச்சுவார்த்தைகள் | பிராகுவே | 24.04.2017-<br>01.05.2017 |
| 17 | செல்வி.ஜே.ஏ.டி.டி.டப்.கே.சிறிவர்தன<br>ஆணையாளர் | வரி ஒப்பந்தங்கள் மீதான செயலமர்வு, BEPS விடயத்திலுள்ள பிரச்சனைகள் மற்றும் பல்தரப்பு விவகாரங்கள் | மெக்ஸிக்கோ | 22.04.2017-<br>30.04.2017 |
| 18 | திரு.ரி.யூஅத்துக்கோரள<br>ஆணையாளர் | 38ஆவது CATA வருடாந்த தொழில்நுட்ப மாநாடு | கானா | 05.11.2017-<br>12.11.2017 |
| 19 | செல்வி.ரி.எம்.எஸ்.எம்.தென்னக்கோன்<br>ஆணையாளர் | வரி மற்றும் குற்றச் செயல்கள் மீதான ஐந்தாவது OECD மாநாடு மற்றும் வரி கற்றச்செயல்களை புலனாய்வு செய்யும் தலைவர்களின் நான்காவது மாநாடு | ஐக்கிய இராச்சியம் | 05.11.2017-<br>11.11.2017 |
| 20 | செல்வி.எஸ்.ஓ.ஏ.சி.ஆர்.நிவுன்ஹெல<br>சிரேஷ்ட பிரதி ஆணையாளர் | வரி ஒப்பந்தங்கள் மீதான செயலமர்வு, BEPS விடயத்திலுள்ள பிரச்சனைகள் மற்றும் பல்தரப்பு விவகாரங்கள் | மெக்ஸிக்கோ | 22.04.2017-<br>30.04.2017 |
| 21 | திரு.எல்.எம்.வசந்த<br>பிரதி ஆணையாளர் | BEPS அமுலாக்கம் – ஆகக்குறைந்த தர நியமங்கள் | கொரியா | 16.04.2017-<br>23.04.2017 |
| 22 | செல்வி.டப்..சி.எஸ்.சேனநாயக்க<br>பிரதி ஆணையாளர் | முகாமைத்துவக் குழுக் கூட்டம் | ஐக்கிய இராச்சியம் | 18.04.2017-<br>22.04.2017 |
| 23 | திரு.ஜீ.எம்.இந்திக<br>பிரதி ஆணையாளர் | சர்வதேச வரிவிதிப்பனவு நடவடிக்கைகள் மீதான செயலமர்வு (TOIT 2017) | மலேசியா | 06.08.2017-<br>26.08.2017 |
| 24 | திருமதி.சி.டி.லொகுலியன<br>பிரதி ஆணையாளர் | சர்வதேச வரிவிதிப்பனவு நடவடிக்கைகள் மீதான செயலமர்வு (TOIT 2017) | மலேசியா | 06.08.2017-<br>26.08.2017 |
| 25 | செல்வி.எஸ்.ஏ.பி.டி.திசாபண்டார<br>பிரதி ஆணையாளர் | இலங்கைக்கும் செக் குடியரசுக்குமிடையிலான இரட்டை வரி விதிப்பனவினைத் தவிர்க்கும் உடன்படிக்கை தொடர்பான பேச்சுவார்த்தைகள் | பிரகுவே | 24.04.2017-<br>01.05.2017 |
| 26 | திருமதி.பீ.என்.எம்.பனாகொட<br>பிரதி ஆணையாளர் | எல்லைகளற்ற வரி பரிசோதகர்கள் (TIWB) அக்கறைதாரர் செயலமர்வு | பிரான்ஸ் | 01.11.2017-<br>05.11.2017 |
| 27 | செல்வி.கே..பீ.பீ.என்.குமாரி<br>பிரதி ஆணையாளர் | BEPS அமுலாக்கம் – ஆகக்குறைந்த தர நியமங்கள் | கொரியா | 16.04.2017-<br>23.04.2017 |
| 28 | திரு.வீ.பி.ஹெட்டிஆராச்சி<br>பிரதி ஆணையாளர் | சர்வதேச வரிவிதிப்பனவு நடவடிக்கைகள் மீதான செயலமர்வு (TOIT 2017) | மலேசியா | 06.08.2017-<br>26.08.2017 |
| 29 | திரு.ஜே.எஸ்.யூ.வீ.டீ சில்வா<br>பிரதி ஆணையாளர் | சர்வதேச வரிவிதிப்பனவு நடவடிக்கைகள் மீதான செயலமர்வு (TOIT 2017) | மலேசியா | 06.08.2017-<br>26.08.2017 |
| 30 | திருமதி.சி.ஜே.குணரத்ன<br>பிரதி ஆணையாளர் | ஆசிய நாடுகளுக்கான சர்வதேச வரி விதிப்பனவு | ஜப்பான் | 08.05.2017-<br>31.05.2017 |

| | | | | |
|---|---|---|---|---|
| 31 | திரு.ஜே.சி.பி.மனதுங்க<br>பிரதி ஆணையாளர் | LHDNM-OECD: அடிப்படை மாற்றல் மற்றும் இலாப மாற்றுகையினைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளின் தொடர்புடைய வரி ஒப்பந்தங்களை அமுல்படுத்துவது தொடர்பான பல்தரப்பு ஒப்பந்தம் | மலேசியா | 19.03.2017-<br>25.03.2017 |

IRDSL

IRDSL

# அத்தியாயம் 7

# சட்டவாக்கம்

IRDSL

IRDSL

## 7.1 குறித்த ஆண்டு காலப்பகுதியில் சட்டமாக்கப்பட்ட சட்டவாக்கம்

i. 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம்
ii. 2017 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க பொருளாதார சேவைக் கட்டண (திருத்தச்) சட்டம்
iii. 2017 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க தேசக் கட்டுமான வரி (திருத்தச்) சட்டம்
iv. 2017 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க காணி (உரிமையின்மை மீதான கட்டுப்பாடுகள்) (திருத்தச்) சட்டம்

## 7.2. அங்கீகரிக்கப்பட்ட தரும தாபனங்கள்

குறித்த ஆண்டு காலப்பகுதியில் ஒரேயொரு தரும தாபனத்துக்கு மட்டும் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

| தரும் தாபனம் | வர்த்தமானி இலக்கம் / பதிவுத் திகதி |
|---|---|
| மாற்றுத்திறனாளி சிறுவர்களுக்கான லோட்டஸ் ஹில் இல்லம் | 2046/10 – 12.11.2017 |

## 7.3 வர்த்தமானி அறிவித்தல்கள்

திணைக்களத்தினால் நிருவகிக்கப்படும் உரிய சட்டங்களின் கீழ் குறித்த ஆண்டு காலப்பகுதியில் பின்வரும் வர்த்தமானி அறிவித்தல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

**அட்டவணை 7.1 – 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல்கள்**

| | வர்த்தமானி இல. | திகதி | விபரணம் |
|---|---|---|---|
| I | 2006/37 | 15.02.2017 | 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இல.உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் பிரிவு 212 மற்றும் 217 இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட 2006 ஆம் ஆண்டின் 01 ஆம் இல. அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதித்துவ ஒழுங்குவிதிகள் |
| II | 2007/24 | 21.02.2017 | 2017.02.21 ஆம் திகதியிலிருந்து பயனுறுதியாகும் வகையில் 1465/20 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட முத்திரைத் தீர்வைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளைக்கான திருத்தம் |
| III | 2012/2 | 27.03.2017 | 2016 மே 02 இலிருந்து பயனுறுதியாகும் வகையில் மொத்த வியாபாரம் மற்றும் சில்லறை விற்பனை மீது பெறுமதி சேர் வரிக்குப் பதிவு செய்துள்ள ஆட்களினால் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் மற்றும் பேணப்பட வேண்டிய பதிவேடுகளினை விதித்துரைக்கும் அறிவித்தல் |
| IV | 2036/23 | 13.09.2017 | 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இல. பொருளாதார சேவைக் கட்டணச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு தொடர்பில் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் |
| V | 2040/21 | 26.10.2017 | பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் கீழ் 2017 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பதிவேட்டினைப் பேணும் ஒழுங்குவிதிகள் |

## 7.4 பொருள்கோடல் குழு

வரிச் சட்ட விதிகள் தொடர்பான பொருள்கோடல் குழுவானது உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் நிருவகிக்கப்படும் சட்டங்களின் ஏற்பாடுகள் தொடர்பான உரைபெயர்ப்புக்கள், விளக்கமளிப்புக்கள், வழிகாட்டுதல்கள் போன்றவற்றின் வழங்குகைகளுக்கு பொறுப்பு வகிக்கின்ற சிரேஷ்ட பிரதி ஆணையாளர் நாயகத்தின் (வரிக் கொள்கை) தலைமையில் உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் சிரேஷ்ட உத்தியோகத்தர்களைக் கொண்டதாக உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் பிரிவு 208அ இன் கீழ் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் 2011 இல் நியமிக்கப்பட்டது.

எவரேனும் ஆள், உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் நிருவகிக்கப்படும் அனைத்து சட்டவாக்கங்களின் ஏதேனும் ஏற்பாட்டில் ஒன்றிற்கு மேற்பட்ட பொருளினைக் காணுமிடத்து, இக்குழுவிடம் (குழு செயலாளர், செயலகம், உள்நாட்டு இறைவரி திணைக்களம்) அது தொடர்பான பொருள்கோடலினைக் கோரலாம். வரிச் சட்ட விதிகளுக்கான உரைபெயர்ப்புக் குழுவானது, குறித்த ஆண்டு காலப்பகுதியில் கையாண்ட ......... வழக்குகள் தொடர்பான பொருள்கோடல்கள் மற்றும் நடைமுறைகள் தொடர்பில் ஒத்திசைவான உறுதிப்படுத்துகைக்கு தேவையான வழிகாட்டுதல்கள் மற்றும் அறிவுறுத்தல்களை வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 31 ஆனது வரிச் சட்ட விதிகள் தொடர்பான பொருள்கோடல் குழுவினால் வழங்கப்பட்ட பொருள்கோடல்களின் விபரத்தினைக் காட்டுகின்றது.

**அட்டவணை 7.2 – 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வரிச் சட்ட விதிகள் தொடர்பான பொருள்கோடல் குழுவினால் வழங்கப்பட்ட பொருள்கோடல்களின் விபரம்**

| வரி வகை | வருமான வரி | பெ.சேர் வரி | தே.க.வரி | முத்திரை தீர்வை | பொ.சே.க. |
|---|---|---|---|---|---|
| வரிப் பொறுப்புடமை | 04 | 04 | 06 | 03 | |
| பங்கிலாபங்கள் | 01 | | | | |
| விலக்களிப்புக்கள் | 01 | 02 | | | |
| ஊழிய வருமானம் | 01 | | | | 02 |
| தகுதிவாய்ந்த கொடுப்பனவு | 01 | | | | |
| வரைவிலக்கணம் | 03 | | 03 | | |
| ஏனையவை | 02 | | | | |
| **மொத்தம்** | **13** | **06** | **09** | **03** | **02** |

# அத்தியாயம் 8

# ஏனைய பணிகள்

IRDSL

IRDSL

## 8.1 வரி செலுத்துனர் சேவைப் பிரிவு

வரி செலுத்துனர் சேவைப் பிரிவானது வரி செலுத்துனர்கள் மற்றும் பொதுமக்களுக்கு வினைத்திறன் வாய்ந்ததும் பயனுறுதிமிக்கதுமான சேவையினை வழங்கும் பொருட்டு வருமான நிருவாக முகாமைத்துவ தகவல் முறைமையின் கீழ் முதன்மைப் பதிவு செயதல் அலகு மற்றும் வாடிக்கையாளர் ஆதரவு மற்றும் ஊக்குவிப்புப் பிரிவு என இரண்டாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

முதன்மைப் பதிவு செய்தல் அலகானது வரி செலுத்துனர் அடையாள இலக்கம் (TIN), வரி முகவர் மற்றும் தனிப்பட்ட அடையாள இலக்கங்கள் (PIN) என்பவற்றினைப் பதிவு செய்யும் நடவடிக்கையினை மேற்கொள்கின்றது. முதன்மைப் பதிவு செய்தல் அலகினால் குறித்த ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட வரி செலுத்துனர்களைப் பதிவு செய்யும் நடவடிக்கையானது பின்வருமாறு.

| பதிவு செய்தல் வகை | இணையம் | நேரடியாக | அறிவுறுத்தலின் பேரில் |
|---|---|---|---|
| வரி செலுத்துனர் அடையாள இலக்கம் பதிவு செய்தல் | 128 | 11,333 | 925 |
| தனிப்பட்ட அடையாள இலக்கம் பதிவு செயதல் | 1,732 | | |
| வரி முகவர் பதிவு செயதல் | 14 | | |

வரி பதிவு செய்தல அலகானது பல்வேறுபட்ட வரி வகைகளினை பதிவு செய்யும் நடவடிக்கையினை இலகுவாக மேற்கொள்ளும் பொருட்டு 2017 இல் தாபிக்கப்பட்டது.

வரிகளின் வேறுபட்ட வகைகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட புதிய பதிவுகள் பின்வருமாறு.

| பெசேவ | இபெசேவ | பெசேவ (தற்காலிக) | தேகவ | வ.வ | உபொசெவ | நிறுத்தி வைத்தல் வரி | பொ.சே.க | ப.வ.வ | த.வ.வ |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2,610 | 342 | 23,088 | 5,448 | 4,192 | 1,293 | 220 | 835 | 2,366 | 13,777 |

வரி செலுத்துனர்களின் பயன்களுக்காக குறித்த ஆண்டு காலப்பகுதியில் பல்வேறு வகையான துண்டுப் பிரசுரங்கள் தயாரிக்கப்பட்டன. மேலும் வரி செலுத்துனர் சேவைப் பிரிவு வரி செலுத்துனர்களுக்கு வரி ஆலோசனைச் சேவைகளினை வழங்கியுள்ளது.

## 8.2 திணைக்களத்தினால் வழங்கப்பட்ட பணிப்புரைகள் மற்றும் இசைவாணைச் சான்றிதழ்கள்

**அட்டவணை 8.1 – திணைக்களத்தினால் வழங்கப்பட்ட பணிப்புரைகளும் இசைவாணைச் சான்றிதழ்களும்**

| விபரணம் | 2016 | 2017 |
|---|---|---|
| ***வழங்கப்பட்ட பணிப்புரைகள்*** | | |
| • வட்டி மீதான நிறுத்தி வைத்தல் வரிக்காக வங்கிகளுக்கு | 142 | 123 |
| ***வழங்கப்பட்ட விடுவிப்புச் சான்றிதழ்கள்*** | | |
| • நாட்டினை விட்டு செல்பவர்களுடன் தொடர்புடையவை | - | 456 |
| ***வழங்கப்பட்ட சிறப்புரிமை அட்டைகள்*** | | |
| • தங்க அட்டைகள் | 97 | 47 |
| • வெள்ளி அட்டைகள் | 78 | 24 |

## 8.3 கைமாற்றல் விலையிடல் ஒழுங்கமைப்பு அலகு

குறித்த ஆண்டு காலப்பகுதியில், கைமாற்றல் விலையிடல் ஒழுங்கமைப்பு அலகானது கைமாற்றல் விலையிடல் முறைகள் தொடர்பான அறிவினை மேம்படுத்துதல் மற்றும் சர்வதேச விலையிடல் பிரச்சினைகளினைப் புரிந்து கொள்ளுவதற்கான அறிவினைப் பெறுதல் எனும் நோக்கங்களுக்காக திணைக்களத்தின் பல்வேறுபட்ட அலகுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட அலுவலர்களின் குழுவொன்றுக்கு 2 வதிவிட செயலமர்வுகள் நடாத்தப்பட்டன. இது பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திக்கான நிறுவனத்திடமிருந்தான (OECD) உதவுகையுடன் கடந்த வருடத்தில் நடாத்தப்பட்ட 2 வதிவிட செயலமர்வுகளின் தொடர்ச்சியாகும்.

இதற்கும் மேலாக, வதிவிட செயலமர்வில் பங்குபற்றியுள்ள அலுவலர்களின் ஆதரவுடன் அறிவினைப் பகிர்ந்து கொள்ளும் வகையில் குறித்த அலகினால் தெரிவு செய்யப்பட்ட 50 பேருக்கு உள்ளகப் பயிற்சியளித்தலானது நடாத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டமானது 26 செயலமர்வுகளினைக் கொண்டிருந்ததுடன் இந்த நிகழ்ச்சித்திட்டத்தினை பூர்த்தி செய்துள்ள அலுவலர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

கைமாற்றல் விலையிடல் ஒழுங்கமைப்பு அலகின் அலுவலர்கள் திணைக்களத்தின் வேறுபட்ட மதிப்பிடல் அலகுகளிலிருந்து பெறப்பட்ட 04 விடயங்களில் கட்டுப்பாடற்ற நிபந்தனைக்குரிய விலை நிர்ணயித்தலினை பூர்த்தி செய்துள்ளனர்.

புதிய விருத்திகள் மற்றும் சட்டவாக்க மாறுதல்களினைக் கருத்தில் கொண்டு கைமாற்றல் விலையிடல் தொடர்பான வரிவான வழிகாட்டியொன்று வடிவமைக்கப்பட்டுள்ளது.

## 8.4 பயிற்சியளித்தல் கிளை

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பயிற்சியளித்தல் கிளையானது, திணைக்கள உத்தியோகத்தர்களுக்காக நடாத்தப்படும் வழமையான பயிற்சியளித்தல் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு மேலதிகமாக குறித்த ஆண்டு காலப்பகுதியில் வரி செலுத்துனர்களுக்கான பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை ஏற்பாடு செய்துள்ளது.

**அட்டவணை 8.2 – விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தின் விபரங்கள்**

| நிறுவகம் | நிறுவகம் | பங்குபற்றிய ஆட்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| பெசேவ மற்றும் தேகவ தொடர்பான செயல்முறை விளக்கங்கள் | காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு | 80 |
| கல்விசார் பதவியினர் மற்றும் மாணவர்களுக்கு வரி தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் | இலங்கை தொழில்நுட்பக் கல்லூரி, மருதானை | 50 |
| சம்பத் வங்கியின் அனுசரணையுடன் சிறிய நடுத்தர தொழில்முயற்சியாளர்களுக்கு வரி விதிப்பனவு தொடர்பான கருத்தரங்கு - மகோ | பிரதேச செயலகம் - மகோ | 70 |

| | | |
|---|---|---|
| முகாமைத்துவம் சார்ந்த அலுவலர்கள், அரசாங்க கணக்காளர்கள் மற்றும் சேவை ஒப்பந்ததாரர்களுக்கு வரிகள் தொடர்பான பயிற்சியளித்தல் நிகழ்ச்சித்திட்டம் | மாவட்டச் செயலகம் - புத்தளம் | 100 |
| பட்டப் படிப்பினை மேற்கொள்ளும் மாணவர்களுக்குக்கு உள்நாட்டு இறைவரியின் தொழிற்பாடுகள் மீதான நிகழ்ச்சித்திட்டம் | வயம்ப பல்கலைக்கழகம் - குளியாப்பிட்டி | 150 |
| இலங்கை மதுபான சங்கத்திற்கு பெசேவ மற்றும் ஏனைய திருத்தங்கள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் | கண்டி | 200 |
| இலங்கை மதுபான சங்கத்திற்கு பெசேவ மற்றும் ஏனைய திருத்தங்கள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் | கம்பஹா | 80 |
| இலங்கை மதுபான சங்கத்திற்கு பெசேவ மற்றும் ஏனைய திருத்தங்கள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் | மாத்தறை | 80 |
| கூட்டுறவுத் துறைக்கு வரி விதிப்பனவு தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் | குருநாகல் | 68 |

IRDSL

IRDSL

# அத்தியாயம் 9

# இறைவரி நிருவாக முகாமைத்துவ தகவல் முறைமை (RAMIS)

IRDSL

IRDSL

இறைவரி நிருவாக முகாமைத்துவ தகவல் முறைமை (RAMIS) கருத்திட்டமானது வரி இணக்கப்பாட்டுக்கான ஆதரவினை அதிகரிப்பதனூடாக மிகவும் வினைத்திறன்வாய்ந்ததும் பயனுறுதிவாய்ந்ததுமான முறையில் வரி செலுத்துனர்களிடமிருந்து இறைவரி வருமானத்தினை சேகரிப்பதனை நோக்காகக் கொண்டுள்ளது. இது வரி வலையமைப்பினை விரிவாக்குவதனையும், இணக்கப்பாட்டினை அதிகரிப்பதனையும் நோக்கமாகக் கொண்டுள்ளது

இறைவரி நிருவாக முகாமைத்துவ தகவல் முறைமை (RAMIS) கருத்திட்டமானது இறைவரி சேகரிப்பினை அதிகரிக்கும் வகையில் வினைத்திறன் மற்றும் பயனுறுதி வாய்ந்த வழிமுறையில் வருமானத்தினைப் பெருப்பிப்பதற்கான ஆதரவினை வழங்குவதனையும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் மூலமான வரி இணக்கப்பாடுகளினை வரி செலுத்துனர்களுக்கு கிடைக்கச் செய்வதனையும் நோக்காகக் கொண்டது. மேலும், தேறிய வரியினை அதிகரிப்பதற்கும், வரி இணக்கப்பாட்டினை மேம்படுத்துவதற்கும், வருமான சேகரிப்பின் வினைத்திறனை விரிவாக்குவதற்கும், உயர்ந்த உற்பத்தித் திறனை பிறப்பிப்பதனூடாக வேலைத்தளச் சூழலின் தரத்தினை அதிகரித்தல் மற்றும் சுய இணக்கப்பாட்டினை அதிகரிக்கும் பொருட்டு வரி செலுத்துனர்களுக்கு மிகச் சிறந்த சேவையினை வழங்குதல்.

2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிதி திட்டமிடல் அமைச்சின் மேற்பார்வையின் கீழ் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் (RAMIS) கருத்திட்டத்தினை அமுல்படுத்துவதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. 2014 ஆம் ஆண்டில், நோக்க அறிக்கையானது தயாரிக்கப்பட்டதுடன் தகவல்களினைச் சேகரித்தல், வலிதான தன்மை மற்றும் வியாபாரச் செயல்முறையினை மீள ஆரம்பிக்கும் செயல்முறை என்பன பூர்த்தி செய்யப்பட்டன. உள்நாட்டு இறைவரித் திணைக்கள இணை நுழைவாயிலானது மூன்று மொழிகளிலும் பார்வையிடத்தக்கதாக 2015 இல் ஆரம்பிக்கப்பட்டது. 1 ஆம் கட்டத்திற்கான சோதனை நடவடிக்கையினை பயன்பாட்டாளர்கள் ஏற்றுக் கொள்ளும் வகையில் விருத்தி செய்யும் நடவடிக்கையானது பூர்த்தி செய்யப்பட்டதனையடுத்து அதே ஆண்டிலேயே ஆரம்பிக்கப்பட்டது.

2016 இல், RAMIS கருத்திட்டமானது அதன் தொழிற்பாட்டினை ஆரம்பித்தது. RAMIS முறைமையின் கீழ் வரி செலுத்துனர்களைப் பதிவு செய்யும் நடவடிக்கையானது 2016 பெப்ரவரியிலிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் இ – பதிவு செய்யும் வசதிகளினை மார்ச்சிலிருந்து பெற்றுக் கொள்ள முடியும். வரி செலுத்துனர்கள் இ- சேவைகளினூடாக பெசேவ, தேகவ, உபொசெவ, நிறுத்தி வைத்தல் வரி மற்றும் கூட்டிணைவு வருமான வரி என்பவற்றின் விபரத்திரட்டுக்களை சமர்ப்பிப்பதற்கான வசதிகள் வரி செலுத்துனர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

திணைக்களமானது, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் அனைத்து அக்கறைதாரர்கள், பிராந்திய அலுவலகங்கள் மற்றும் பதவியினருக்கு RAMIS கருத்திட்டத்தினை வினைத்திறனை மேம்படுத்தும் பொருட்டு முறைமையின் தொழிற்பாட்டு பகுதிகள், நன்மைகள் மற்றும் முறைமையின் முக்கிய பகுதிகள் என்பன குறித்து விளக்கமளிக்கும் வகையில் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியுள்ளது.

IRDSL